

# சமூக கல்வியும் வரலாறும் செயல் நூல்

தரம் 10


ஆக்கம்: கலாநிதி பொன். சக்திவேல்

விலை 120 /=


BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, First Floor P. O. Box 162,
Colombo Central Super Market
Complex. Colombo - 11 T.P. 434770

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL
SUPER MARKET COMPLEX P.O. BOX NO.: 162,
COLOMBO - 11. TELE: 434770

# முன்னுரை



பாடசாலை மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு உள்ளன. அப்புத்தகங்கள் கல்விச் சீர்த்திருத்த செயன் முறைக்க இணங்க வெளிவந்துள்ளது.

இந்நூலில் குறிக்கப்பட்ட குறிக்கோளும் அடிப்படைத் தகைமையும் கிடைக்க வழி செய்யக் கூடியதாக அமைந்ததே செயற்பாட்டு - செயல் நெறிநூல்களாகும். இந்நூலானது பாடநூலில் கொடுக்கப்பட்ட கருத்தை மிகவும் இலகுவாக விளங்கி கொள்ளும் பொருட்டு அட்டவணைப் படுத்தி, பாடப் பொழிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாடப் பொழிப்புடன் இலகுவாக மாணவர் நெறி அட்டவனைகளும் விளங்கி கொள்ளும் பொருட்டு வினாவிடையாகவும் தொகுக்கப் பட்டுள்ளது.

மாணவர்களின் விருப்பு வெறுப்புகளையும் அவர்களின் பிரச்சினைகளையும் எமது கல்விச்சேவை ஊடாக இனங்கண்ட நாம் அவர்களை செயற்பாடுகளினுடாக மாணவர்கள் சுயமாக கற்கும் வசதியை வழங்ககூடிய முறையில் ஊக்கவிப்பு பயிற்சியாகவே நூல்களை அமைத்துள்ளோம்.

மாணவர்கள் அன்றாடக் கல்விக் கருமங்களில் கூடிய கவனம் செலுத்தும் நோக்குடனே இந்நூல் வெளியிடப்படுகின்றது...

நன்றி

கலாநிதி பொன். சக்திவேல்.

ISBN - 955 -8332 - 04 - 6

# 1. இலங்கையின் பண்டைய தொழில் நுட்பம்

## 1.1. பாடப் பொழிப்பு

### பண்டைய தொழில் நுட்பம்

1. ஆரியர் வருகைதந்தபோது குவேனி நூல் நூற்றால் என மகாவம்சம் கூறுகிறது.
2. அன்றாட செயற்பாடுகளுக்கு கல்லாயுதங்கள், இலகு கருவிகள் பயன்படுத்தினார்கள்.
3. உணவுத் தேவைக்காக தானியங்களையும் கிழங்குகளையும் பழங்களையும் பயன்படுத்தினார்கள்.
4. நீரைப் பெறுவதற்கு வில்லு, குளம் போன்றவற்றைப் பயன்படுத்தினார்கள்.
5. நீரைச் சேமித்து விவசாயம் செய்வதோடு, நீர்ப்பாசன நடவடிக்கையை எளிதாகப் பயன்படுத்தினர்.

## 1.3. இலங்கையின் ஆரியக் குடிப்பரம்பல்

ஆரிய குடியேற்றங்கள் பரவிய இடங்கள்:

| விஜயனும் குழுவினரும் | புத்த கச்சானாவும் சகோதரக் குழுவினரும் |
|---|---|
| ↓ | ↓ |
| தம்மன்னாவ | ரோஹன |
| விஜித காம | தீகவாபி |
| அநுராதகாம | கோகண்ண |
| உருவெலகாம | |
| உபதிஸ்ஸகம | |

ஆரியர் இரும்பைப் பயன்படுத்தும் அறிவைப் பெற்றிருந்தனர். என்பதற்குச் சாட்சியாக "அயோ அயஸ்" ஆகிய சொற்கள் சான்றாக உள்ளன.

### ஆரியர் விவசாயம் செய்தபோது ஏற்பட்ட பிரச்சினைகள் சில:

1. குறித்த ஒரு காலத்திற்கு மட்டும் ஆற்று நீர் போதியதாக இருந்தமை.
2. குறித்த ஒரு காலத்தில் மட்டுமே மழை நீர் கிடைத்தமை.
3. அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ற உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டமை.
4. நிச்சயமற்ற மழைவீழ்ச்சி.

### ஆரியர் தமது நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு தரைத்தோற்ற அமைப்பினைப் பயன்படுத்திய முறை:

1. உள்ளகச் சமவெளியில் காணப்படும் எச்சக் குன்றுகளூடாகப் பாய்கின்ற ஆறுகளை குன்றுகளின் ஒடுங்கிய பகுதிகளின் இரு சுவடுகளையும் இணைப்பதன் மூலம் குளக்கட்டை அமைத்து, ஆற்றோட்டத்தை தடைசெய்து, குளமொன்றை உருவாக்குதல்.
2. இக்குளத்து நீர் சமவெளிகளுக்கூடாகப் பாய்ந்து செல்ல கால்வாய்களை அமைத்தல்.
3. குளத்து மட்டத்துக்குக் கீழே சமவெளிகளில் அமைந்துள்ள வயல் வெளிகளுக்குக் கால்வாய் மூலம் நீரை

வழங்குதல்.

4. ஆற்றுநீரின் வேகம் குறைந்த இடங்களில் அணைகளை அமைத்து நீரைத் தேக்கி கால்வாய் ஊடாக சமவெளிப்பிரதேச வயல் வெளிகளுக்கு நீர் வழங்கினர். இதனை அமுன (சிறு அணைக்கட்டு) என அழைப்பார்.

முன்னோர்களிடம் காணப்பட்ட நீர்ப்பாசனம் தொடர்பான அறிவினைக் குளமொன்றின் அமைப்பினைக் கற்பதன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும். இந்த அமைப்பினை பாடநூலில் வாசிக்கலாம்.



காஷ்மீரில் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு இலங்கையிலிருந்து தொழில் நுட்பவியலாளர்கள் கொண்டு செல்லப்பட்டதாக அந்நாட்டின் வரலாற்றைக் கூறும் வம்சக் கதையான 'இராஜதரங்கனி' யில் கூறப்பட்டுள்ளது.

குளங்களுக்கு அருகே உள்ள காவற்கற்களில் நாக சின்னம் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

குளங்களை அமைக்கப் பொறுப்பானவர்கள் 'கமிசு' அல்லது 'பருமக' என்று அழைக்கப்பட்டனர்.

சிங்கள அரசர்கள் நியமித்த நீர்ப்பாசன அலுவலர்கள் ~ உதாரணமும், சான்றும்.

1. தம்புள்ள குகைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'அனான்னிகநிஷ'
2. கேகாலை குகைக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'அடி தர உதர'
3. 2 ஆம் சேன மன்னன் காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'வேவெஜநம'

தொல்பொருள் ஆய்வு ஆனையாளர் செனரத் பரனவித்தாரன அபிப்பிரயமாகும்.

| குளக்கட்டு | அலைதாங்கி | சுருங்கை | கலிங்கல் மடைக்கதவு | கலிங்கள் தொட்டி |
|---|---|---|---|---|
| இரண்டு மலைச் சுவடுகளை இணைத்து நதியின் குறுக்காக கட்டப்படும் சக்தி வாய்ந்த அணை. | குளக்கட்டின் நீர் அரிப்பைத் தடைசெய்வதற்காக கட்டின் உட்புறத்தில் கற்களைப் பரப்பி உருவாக்கப்படும் பலம் வாய்ந்த தடை | மேலதிக நீரை வெளியேற்றி குளக்கட்டைப் பாதுகாப்பதற்காக கட்டின் உயரத்தை விடக் குறைந்த மட்டத்தில் அமைக்கப்படுவது. | உயர் கலிங்கல் நீர் விநியோகத்திற்காக குளக்கட்டின் உயர் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள துவாரம் | பண்டைய தொழில் நுட்பத்தில் பிரமிக்கத்தக்க ஒரு நிர்மாணமாகக் கொள்ளக் கூடிய இது நீர் விநியோகம் பராமரிப்பு என்பவற்றுடன் குளக்கட்டின் பாதுகாப்புக்காகவும் உருவாக்கப்பட்டதாகும். |

| அளவு | காலம் | அரசன் | குளமும் கால்வாயும் |
|---|---|---|---|
| சிறிய குளம் | கி. மு. தொடக்கம் கி. பி. 1ஆம் நூற்றாண்டு வரை | பண்டுகாபய மன்னன் (கி.மு.387~387) தேவாநம்பியதிஸ்ஸ மன்னன் (கி.பி. 247~247), சத்தாதிஸ்ஸ மன்னன் கி.பி. 137~139 | அபயவாவி (பசவக் குளம்) ஜயவாவி, காமினிவாவி திஸாவாவி 18 குளங்கள் |
| நடுத்தர அளவிலான குளங்கள் | கி. பி. 1 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 3ஆம் நூற்றாண்டு வரை | வசப மன்னன் (கி. மு. 111~67) இளநாக மன்னன் (கி. பி. 33~43) | மகாவிலச்சிய. மானாகடிய. நொச்சிப் பொத்தான. ஹிரிவடுன்ன உட்பட 11 குளங்களும். எலஹெர உட்பட 12 கால்வாய்களும். திஸ்ஸ வாவி ~ தாரதிஸா வாவி |

| | | | |
|---|---|---|---|
| பெரிய குளங்கள் | கி. பி. 3ஆம் நூற்றாண்டு முதல் | மகாசேன மன்னன் (கி. பி. 274 – 301) | மின்னேரி கவுடுலு, ஹுருலு, மாகல்ல, மககனதாறா உட்பட 16 குளங்களும் பப்பதன்ன கால்வாய் |
| | | 1ஆம் உபதிஸ்ஸ மன்னன் (கி. பி. 365 – 406) | தோபா வாவியும், 6 குளங்களும் |
| | | தாதுசேன மன்னன் (கி. பி. 455 – 473) | கலாபள்ளு, மாததுகம உட்பட 18 குளங்களும் யோத கால்வாயும். |
| | | 2ஆம் முகல மன்னன் (கி. பி. 531 – 551) | நாச்சதுவ குளம் (பத்பகன் குளம்) பதவிய வாவி |
| | | 1ஆம் அக்போ மன்னன் (கி. பி. 571 – 604) | மாமடுவ வாவி, குருந்து வாவி, சிறிவட்ட மானக வாவி என்பனவும் மினிப்பே அணையும். |
| | | 2ஆம் அக்போ மன்னன் (கி. பி. 604 – 614) | கிரிதலே வாவி, கந்தளாய் குளம் உட்பட ஹத்கொட அணையும். |
| | கி. பி. 1017 தொடக்கம் கி. பி. 1070 வரை | 1ஆம் விஜயபாகு மன்னன் (கி. பி. 1070 – 1110) | சோழர் காலத்தில் சிதைவடைந்த குளங்களை புனரமைப்புச் செய்தல். |
| | | 1ஆம் பராக்கிரமபாகு மன்னன் (கி.பி. 1153–1186) | 'பராக்கிரம சமுத்திரம்' தெதரு ஓயா அபிவிருத்தி, பண்டுவஸ்நுவர பண்டவாவி, களுத்துறை மாவட்டத்தில் சதுப்ப நிலத்தை நிரப்பி அபிவிருத்தி செய்தல், அங்கமெடில்ல அணை. |
| | | நிஸங்கமல்ல மன்னன் (கி. பி. 1187 – 1196) | சிதைவடைந்த குளங்களைப் புனரமைப்புச் செய்தல். |

## கட்டிட நிர்மாணக் கலை

### முற்காலக் கட்டிடக் கலையின் சிறப்பம்சங்கள் – சான்றுகளுடன்.

1. அநுரதபுரத்தில் அமைந்துள்ள 'குட்டம் பொகுன' என்ற பொய்கை சிறந்த நிர்மாணம் எனக்குகருதப் படுகிறது.

### நிர்மாணக் கட்டிடக் கலையின் பிரிவுகள்



1. தாதுகோபம், போதிமனை, சிலை மனை.
2. விகாரமனை, போயமனை, ஆராமைகள், தியான மண்டபம் தானசாலை.
3. இராசமாளிகை அரண்.
4. நீராடற் பொய்கை, மலசலகூடம், வைத்தியசாலை.
5. பொலநறுவ சிவன் கோயில்.

### தாதுகோபம்


1. சிறந்த கட்டிடப் படைப்பாகக் தாதுகோபம் என்றதூபி கருதப்படுகிறது.
2. தாது கோபமானது தாது, சைத்தியம், தூபி, ரூபய, விகாரை என பலபெயர்களால் அழைக்கப்படுகிறது.
3. வரலாற்றில் முதலாவது தூபியாகக் கருதப்படுவது தூபாராம ஆகும்.
4. துட்ட கைமுனு மன்னன் காலம் முதல் பெரிய தாதுகோபங்கள் உருவாக்கப்பட்டன.
5. துட்ட கைமுனு மன்னனால் மகாதூபி அமைக்கப்பட்டது ருவான்வெலிசாய, மிரிச வெட்டி தாது கோபம்
6. வலகம்பாகு மன்னனால் அபயகிரிதூபி அமைக்கப்பட்டது.
7. மகாசேன மன்னனால் ஜேத்தவன தூபி அமைக்கப்பட்டது.

| அநுரதபுரத்திற்கு வெளியே அமைந்துள்ள தூபிகள் | |
|---|---|
| களனி<br>திஸ்ஸமகாராம<br>சோமாவதிய | தீகவாபி<br>சேருவில<br>மகியங்கனை |

| பௌத்த நூல்களில் கூறும் ஆறு வடிவங்களிலான தூபிகள் | |
|---|---|
| 1. நெற்குவியல் வடிவம் | 2. கோவில் மணி வடிவம் |
| 3. நீர்க்குமிழ் வடிவம் | 4. பானை வடிவம் |
| 5. தாமரை வடிவம் | 6. நெல்லிக்கனி வடிவம். |

### தூபியொன்றின் பகுதிகள்


5. கலசம் (மாணிக்கத்தால், உலோகத்தால் செய்யப்படும்.
4. கலசபீடம் (தேவர்மேடை)
3. சதுர அடைப்பு (புனித சின்னங்கள் இதில் உள்ளன)
2. கோலாகாரகர்ப்பம்
1. முத்தட்டு வளையங்கள்




### தூபி ஒன்றை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள்:

1. தூபியின் அளவுக்கேம்ப அத்திவாரத்தை நிர்மாணிக்க உயர் விஞ்ஞான கேத்திர கணித அறிவு உபயோகித்தமை.
2. தூபியின் அடித்தளம் மிகப் பலமாயமைந்தமை.
3. தூபியின் வடிவினைப் பாதுகாக்க எடுத்த கடின முயற்சி.
4. ஜேதவனாராமய நிர்மானத்தில் பாவிக்கப்பட்ட பொருட்களை உயரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட என்பது வியக்கத்தக்கதாகும்.

### கௌதம புத்தரின் சிலைகள்




கருங்கல்லினால் புத்தரின் சிலையை வடிக்கும் பணி கி. பி. முதலாம் நூற்றாண்டு தொடக்கத்தில் ஆரம்பமாயிற்று. இச்சிலைகள் புத்த பெருமானின் கருணை, ஞானம் போன்றன உயர்குணங்களைப் பிரதிபலிக்கிறது.

| நிற்கும் சிலைகள் உள்ளஇடம் | வேறு சிலைகள் உள்ள இடம் |
|---|---|
| 1. அவுக்கண | சமாதி சிலை |
| 2. சாஸ்ஸேருவ | தொழுவில சிலை |
| 3. புதறுவகல | தந்திரி மலையில் அமர்ந்த சிலை |
| 4. மாலிகாவில | பொலநறுவை கல் விகாரை |
| | சயன நிலை சிலைகள் |

## சிற்பக் கலை

### சிற்பக் கலை வார்ப்புக்கலையின் சிறப்புக்களை அறியும் முறை





1. மிகிந்தலை கண்டக சைத்தியத்தின் வாயில் மண்டபத்தில் காணப்படும் மிருக உருவங்கள், கற்பகத்தருக்கள், பூரணகும்பம், சந்திர வட்டக்கல், வாயிற் செதுக்கல்கள், கொரவக்கல், இசுருமுனிய காதலர், குதிரை முக மனிதன் போன்றவற்றில் சிற்பக் கலையின் உயர் தொழில்நுட்பங்களைக் காணலாம்.


## சீகிரிய கோட்டை

### சிறப்பம்சங்கள்


1. சீகிரியாவின் சிறந்த தொழில்நுட்ப அமைப்புக்கு வழிவகுத்தவர் காசியப்ப மன்னன் ஆகும்.
2. இந்த மன்னனின் கலையார்வத்தை சீகிரிய சுவர் ஓவியங்களும் அழியாத கோலங்களும் நினைவு படுத்துகின்றன.
3. சீகிரியா பிரசித்திபெறக் காரணமாயுள்ளவை சுவரோவியங்களும், மெருகூட்டப்பட்ட சுவர்களும், சிங்க உருவ வாயிலுமாகும்.
4. சீகிரிய கோட்டையைச் சுற்றி அகழி நீர் ஊற்றுக்கள் காணப்படுவது அக்கால நீர்ப்பாசனத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.














## வைத்தியக் கலை

1. வைத்தியக் கலை அரசர்களின் உதவியுடன் அபிவிருத்தியடைந்தது.
2. வைத்திய உபகரணங்கள் 'ஆலாஹன' பிரிவினர் மேற்கொண்ட அகழ்வுகளிலிருந்து கிடைத்துள்ளன.
3. புராதன வைத்தியக்கலை பல நுட்ப முறைகளைக் கொண்டிருந்தது.
4. அன்றைய மன்னர்கள் வைத்தியத் துறைக்கு அளவற்ற சேவைகளை ஆற்றியுள்ளனர்.

## உலோகத் தொழிற்சாலை

பண்டைசமுதாயத்தினரின் வெவ்வேறு விடயங்களை வெளிப்படுத்தும் புராதனப் பொருட்கள் பல அபயகிரி அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்டன.

உலோகத் தொழிற்சாலை ஒன்றிலிருந்து பெறப்பட்ட சிதைவுகளை அபயகிரி அகழ்வின்போது கிடைத்தது.

## அகழ்வில் கண்டெடுக்கப்பட்டவை

1. உலோகத்தை உருக்கி சிலை வடித்துள்ளமையை அறியலாம்.
2. வெளிநாட்டுத் தேவைகளுக்கு உலோகங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.
3. உலோக நாணயங்களை அபயகிரி அகழ்வில் கண்டெடுத்தனர்.
4. பெறுமதி மிக்க உலோகம், மாணிக்கம், வெவ்வேறு கற்கள்.
5. பவளங்களும் ஆபரணங்களும்.
6. 'ஹஸ் எபுகஸாபண' என்ற பெயரைக் கொண்ட காசு
7. உலோகப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான உருக்குப் பாத்திரம் (புடக்குகை) அடுப்பு.
8. உள்நாட்டுப் பீங்கானும், கண்ணாடிப் பொருட்களும்.
9. வர்ண ஓடுகள்.

**செயல் நெறி**

**1. சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. ஆரிய கூட்டத்தினர் இலங்கைக்கு வருகை தந்தபோது ...................... நால்நூற்றுக் கொண்டிருந்தாள்.
2. ......................, பெல்லன் பதிபலஸ்ஸ இடங்களில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
3. கி. மு. ........................... ஆம் நூற்றாண்டில் ஆரியர் இலங்கைக்கு வந்தனர்.
4. கால்வாய்களுக்கூடாக சமவெளிப் பிரதேச வயல்வெளிகளுக்கு நீர் வழங்குதலை ........................ என அழைப்பர்.
5. மல்வத்து ஓயாவுக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ள அணை ........................
6. காஷ்மீரின் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கதை ........................ ஆகும்.
7. 2 ஆம் சேன மன்னன் காலத்தில் ............................ என்பவர் நீர்ப்பாசன அலுவலராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.
8. தாதுசேன மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட குள்ளம் ........................ ஆகும்.
9. மகாசேன மன்னன் ........................ எனப் புகழப்பட்டான்.
10. வரலாற்றில் முதலாவது தூபியாகக் கருதப்படுவது ............................... .
11. புத்தரின் புனிதச் சின்னங்கள் ...................... பதிக்கப்பட்டுள்ளன.
12. முற்காலத்தில் பாம்பு தீண்டியவர்களை ........................ படுக்க வைத்து சிகிச்சை அளித்தனர்.

**2. பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடை தருக.**

1. முற்கால மக்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்திய பொருட்கள் சிலவற்றைத் தருக.
.......................................................................................................................................
2. ஆரியர் விவசாயத்தில் ஈடுபடும் போது எதிர்நோக்கிய பிரச்சினைகள் யாவை?.
.......................................................................................................................................
3. குளங்கள், அலைதாங்கி, சுருங்கை போன்றவற்றிக்கான வித்தியாசங்களைத் தருக.
.......................................................................................................................................
4. கலிங்கத் தொட்டி என்றால் என்ன?.
.......................................................................................................................................
5. முற்கால மன்னர்கள் நீர்ப்பாசனத்திற்குச் செய்த நன்மைகளை விவரிக்க.
.......................................................................................................................................
6. முற்காலக் கட்டிடங்களை நிர்மாணித்த திறமைகளைப் பற்றி நீர் அறிந்ததைக் கூறுக.
.......................................................................................................................................
7. 'தாதுகோபம்' என்றால் என்ன? அதன் இயல்புகளைக் குறிப்பிடுக.
.......................................................................................................................................

8. கௌதம புத்தரின் சிலைகள் காணப்படும் பிரதான இடங்களைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................


9. சிற்பக்கலையின் சிறப்புக்களைப் பிரதிபலிக்கும் சிற்பங்களாகக் கருதப்படுபவை யாவை?

.......................................................................................................................................

10. அகழ்வு மூலம் கண்டெடுக்கப்பட்ட உலோகப் பொருட்கள் யாவை?

.......................................................................................................................................

## 3. பின்வருவனவற்றில் சரியான விடை இனம்கண்டு எடுதுக.



1. இலங்கையில் ஆரியர் குடியேற்றம் செய்த இடங்களைப் படத்தில் குறிப்பிடுக.
2. இலங்கையிலுள்ள குளங்களையும் அதனை கட்டுவித்த அரசர்களையும் அட்டவணைப்படுத்துக.
3. அநுராதபுரக் காலத்தில் கட்டிட நிர்மாணக் கலையில் காணப்பட்ட பிரிவுகள் யாவை? அட்டவணைப்படுத்துக
4. தாது கோபம் ஒன்றிலுள்ள பல்வேறு இயல்புகளைக் கூறுக.
5. தாபியில் காணப்படும் பகுதிகளின் பெயர்களைக் எழுதுக.
6. சீகிரிய கோட்டையின் வரலாற்றை விபரமாக எழுதுக.
7. அன்றைய மன்னர்கள் வைத்தியத்துறைக்கு ஆற்றிய சேவைகளைக் குறிப்பிடுக.

## 4. பின்வரும் வினாக்களக்கு விரிவான விடை தருக.

1. இலங்கையின் பண்டைய நீர்ப்பாசன முறைபற்றி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிற்கு பேட்டி கொடுப்பதற்காக அறிக்கை ஒன்று தயாரிக்குக.
2. பண்டைய தொழில் நட்ப முறைகளை ஆதாரமாகக் கொண்டு விளங்கும் கலிங்கற்தொட்டி பற்றி ஓர் விமர்சனம் தயாரிக்குக.
3. ஓர் தாபி ஒன்றை வரைந்து அதன் பகுதிகளைப் பெயரிட்டு தாபியின் முக்கியத்துவத்தை விபரிக்குக.
4. பண்டைய கட்டிடக் கலையை வளர்த்த அரசனான காசியப்பனின் செயல்களைக் குறிப்பிடுக.
5. பண்டைய மன்னர்கள் வைத்தியத்துறைக்கு ஆற்றிய சேவைகளைக் கோவைப்படுத்துக.
6. தொல் பொருள் ஆராய்ச்சியில் அகழ்வுகளிலிருந்து கிடைக்கப்பட்ட பொருட்களை அட்டவணைப் படுத்துக.

| பொருட்கள். | | | |
|---|---|---|---|
| | | | |

பின்வருவம் வினாவிட்கு சரியான விடையின் கீழ் கீறிடுக.

1. பதியகம்பொல, பொம்பரிப்பு பாகியன்கல ஆகிய இடங்கள் தொடர்பன பொது அம்சம் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
   1. புராதன குளங்கள் அமைந்துள்ள இடங்கள்
   2. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படல்
   3. வெளிநாட்டவர்களின் வருகைக்கான ஆதாரங்கள் காணப்படல்
   4. அழிவுற்ற பண்டைய பௌத்த வழிபாட்டுச் சின்னங்கள் காணப்படல்

2. பின்வருவனவற்றில் வசபன், மகாசேனன், மகா பராக்கிரமபாகு மன்னன் ஆகியோருக்கு பொதுவான காரணி எதுவாகும்?
   1. நீர்ப்பாசன முறைகளை விருத்திசெய்வதில் பாரிய சேவையை மேற்கொண்டமை.
   2. இலங்கையை ஒற்றுமைப்படுத்திய அரசர்களாகும்.
   3. வெளிநாட்டவர்களின் படை யெடுப்புகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தவர்களாகும்.
   4. வெளிநாடுகளிலிருந்து பௌத்த பிக்குகளை அழைத்து உபசம்பதாவை ஆரம்பித்தமை.

3. இலங்கை விவசாயத்தில் மழையை நம்பியிருப்பதிலும் பார்க்க நீர்ப்பாசனத்தை நம்புவதனால் நெற்பயிர்ச் செய்கையில் கூடிய அறுவடையைப் பெற முடியும். இதற்குக் காரணம் என்ன?
   1. தேவைப்படும் போது தேவையான அளவு நீரினைப் பெறக் கூடியதாயிருத்தல்.
   2. எல்லாப் பிரதேசங்களுக்கும் சம அளவு நீரினை வழங்கக் கூடியதாயிருத்தல்.
   3. நீரின் உச்ச அளவினைப் பெறக்கூடியதாயிருத்தல்.
   4. மழை நீரில் உப்புத்தன்மையின் அளவு அதிகமாக இருத்தல்.

4. மகாசேனன் மன்னனின் ஆட்சிக்காலம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று எது?
   1. பாரியளவு நீர்ப்பாசன முறையை நீர்மாணித்தமை.
   2. மகாயான புத்தமதத்துக்கு அனுசரணை வழங்கியமை.
   3. பௌத்தசங்கத்தைப் புனருத்தாரணம் செய்து திரிபிடகத்தை எழுதுவித்தமை.
   4. அபயகிரிக்கும் மகாவிகாரைக்கு மிடையில் காணப்பட்ட முரண்பாடு விருத்தியடைந்தமை.

5. புராதன காலத்திலே இலங்கையின் மருத்துவ சேவைகள் உயர்நிலையை எய்தியிருந்தன என்பதைப் பின்வருவனவற்றுள் எக்காரணிகள் எடுத்துக் காட்டுகின்றன?

   A புதைபொருள் ஆராய்ச்சி சம்பந்தமான அகழ்வுகளின்போது புராதன மருத்துவக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டமை.

   B தற்போதுள்ள சிதைவுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மக்கள் ஆரோக்கியமானவர்களாக இருந்தனர் எனக் கருதப்படுகின்றமை.

   C மன்னர்களுள் சிலர் மருத்துவ நிபுணர்களா விளங்கினர் எனும் உண்மை ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

   D புராதன காலத்திலே பெருமளவான மருத்துவ நூல்கள் எழுதப்பட்டமை.

   1. Aஉம் Bஉம் 2. Bஉம் Cஉம் 1. Aஉம் Cஉம் 1. Cஉம் Dஉம்

1. ஆரியர் குடியேற்றம் செய்த இடங்களை எழுதுக.

| |
|---|
| |

2.

| குளத்தினது பெயர் | கட்டுவித்த அரசன் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

3.

| கட்டிடநிர்மாணக் கலைப்பிரிவு |
|---|
| |
| |
| |
| |

தூபியொன்றின் பகுதிகள்


1. ..................................................................................

2. ..................................................................................

3. ..................................................................................


4. ..................................................................................

5. ..................................................................................



4. இலங்கையில் காணப் படும் தூபிகள்


சிகிரியா கோட்டை வரலாறு



5. பின்வருவன குறித்து நிற்பவை எவை

1. (a) இலங்கை புதை பொருள் ஆராய்ச்சி ஆய்வுப் பொருட்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன. அவை எண்னவென்பதை கீழேயுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.

(A)




..................................................

(B)



..................................................

(C)




..................................................

(D)



..................................................


2. அருகிலுள்ள படத்தில் வரலாற்று முக்கியமான ஆறுகள் இடங்கள் பல 1~8 வரை இலக்கமிடப்பட்டுள்ளன. அவற்றுள் கீழ் குறிப்பிட்டவைகளுக்குப் பொருத்தமான இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.



(i) பலன ..............................................................

(ii) கோன்நதி ......................................................

(iii) மாகம ...........................................................




6. (i) (a) தரப்பட்டுள்ள படத்தில் A, B, C எனக் குறிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் இலங்கை வரலாற்றின் புராதன காலப் பகுதியில் எப்பெயர்களினால் வழங்கப்பட்டன என்பதை A,B,C என்ற ஒழுங்கில் எழுதுக.

A..............................................

B..............................................

C..............................................


(b) இக்காலப் பகுதியில் A,B ஆகிய பிரதேசங்களின் ஆட்சி மத்திய நிலையங்கள் எவை என்பதைப் பெயரிடுக.

A..............................................

B..............................................

(i) (a) இலங்கையின் உயர் கலை ஆக்கங்கள் இரண்டு X,Y என்ற படங்களிற் காட்டப்பட்டுள்ளன. அவை, யாவை என்பதைக் குறிப்பிடுக.

X.............................................. Y..............................................


X



(b) Y இல் இடம் பெற்றுள்ள கலை ஆக்கத்தில் காணப்படும் மிருகங்கள்தொடர்பாகப் பொலன்னறுவைக் காலத்தில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களை எழுதுக.


..............................................................................................................................

(உ) அவ்வாறு மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

..............................................................................................................................

..............................................................................................................................


7 கி. பி. 1521 இல் விஜயபாகு படு கொலை இடம் பெற்ற பின் மூன்று புதிய இராசதானிகள் தோன்றியதை படத்தில் ABC என குறித்துக் காட்டுகின்றன. அவ்விராசதானிகள் எவ்வாறு அழைக்கப்பட்டன என கீழ் உள்ள முறிவுக் கோட்டில் எழுதுக.




A ..........................................

B ..........................................

C ..........................................




8. (a) இந்தப் படத்திற் புராதன காவற் கல் ஒன்று காணப்படுகிறது. அந்தக் காவற் கல்லில் காணப்படும் குறியீடு என்ன?

..........................................................................................

(b) இத்தகைய காவற் கற்கள் எதனுடன் தொடர்புடையனவாகக் காணப் படுகின்றன? ..........................................................................................

9. (i) இலங்கையின் ஆதிக் குடியிருப்பக்கள் கதம்ப நதி, கோண நதி, கிரிந்தி ஓயா ஆகிய மூன்று நதிகளின் பள்ளத்தாக்குகளில் உருவாயின. அவை இந்தத் தேசப்படத்திலே A, B, C எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த நதிகள் மூன்றினதும் பெயர்களை A,B,C எனும் ஒழுங்கில் எழுதுக.




(ii) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியுடன் தொடர்புடைய இலங்கை மன்னனின் பெயரை எழுதுக.

(அ) இலங்கைக்கு பௌத்த மதம் கொண்டுவரப்பட்டமை

..........................................................................................

(ஆ) யோத கால்வாய் எனப்படும் ஜய கங்கையைக் கட்டுவித்தமை

..........................................................................................

(இ) சோழர்களை இந்நாட்டிலிருந்து வெளியேற்றி, பொலனறுவையை முதன்முதலில் இலங்கையின் தலைநகராக்கியமை.

..........................................................................................

(ஈ) இலங்கையிலிருந்து சென்ற வியாபாரத் தூதுக்குழுவொன்றிற்கு இன்னல் விளைவித்தமையினால் பர்மா மீது படையெடுத்தமை.

..........................................................................................

(iii) நீர்ப்பாசன நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்காக மகாசேன மன்னன் ஆற்றிய சேவையை விவரிக்க

..........................................................................................


(iv) 13 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இராசரட்டையில் வாழ்ந்த மக்கள் தென்மேற்கு நோக்கிக் குடி பெயர்வதற்கு ஏதுவான இரண்டு காரணிகளை விவரிக்குக.

..........................................................................................

10. (i) இவ்வினா தொடர்பான தேசப் படத்தில் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களும் ஆறுகளும் 1 முதல் 12 வரையிலான இலக்கங்களினாலே குறிக்கப் பட்டுள்ளன. வினாக்களுக்கான சரியான விடையைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

(a) போர்த்துக்கேயர் முதன்முதலில் வந்து இறங்கிய இடம்.

..............................................................................................



(b) மினிப்பே அணைக்கட்டு

..............................................................................................

(c) கோகர்ணம்


..............................................................................................

(d) திகாமதுள்ள குடியிருப்பு விரிவடைந்த ஆற்றுப் பள்ளத்தாக்கு

..............................................................................................

(ii) (a) இப்படத்திலே சித்திரிக்கப்பட்டுள்ள அமைப்பு யாது?

..............................................................................................



(b) இது எதனுடன் சம்பந்தப்பட்டதாக ஊள்ளது?

..............................................................................................

(d) இந்த அமைப்புகள் ........................ நோக்கிக் கொண்டிருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

(iii) பின்வரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களை இடைவெளிகளில் எழுதுக.

(a) மோனா லிசா எனும் ஓவியம் ........................ என்பவரால் வரையப்பட்டது.

(b) மாத்தளையிலே அலுவிகார எனுமிடத்தில் திரிபிடகம் எழுதப்பட்டுவதற்கு ஆதரவளித்த மன்னன் ................................................ ஆவான்.

(c) 1818 இலே சுதந்திர இயக்கத்திற்குத் தலைமை வகித்தவன் ............................ என்பவனாவன்

(d) கண்டி இராச்சியத்திலே கைதியாக இருந்து, தப்பி ஓடிய பின்னர், இலங்கையைப் பற்றி ஒரு நூலை எழுதியவன் .................................... என்பவனாவான்.

(e) புவி உட்பட ஏனைய கோள்கள் யாவும் சூரியனைச் சுற்றிச் செல்கின்றன என்பதை முதன் முதலில் கண்டுபிடித்தவர் ................................ என்பவராவார்.

# 2. இலங்கையின் புராதன வெளிநாட்டுத் தொடர்புகள்

## 2.1 பாடப்பொழிப்பு

**இலங்கைத் தொடர்பு**

- பொருளாதாரம்
- அரசியல்
  - வர்த்தகத் தொடர்பு
    - ஐரோப்பா உட்பட மேற்கு நாடுகள்
      - மத்தியதரை நாடுகள் ஊடாக
        - முத்து, மருந்து வகை
    - சீனா இந்தியா போன்ற கிழக்கு நாடுகள்
      - மலாக்க நீரிணை ஊடாக
        - கறகள், பட்டு, பீங்கான்
- சமயம்
- கலாச்சாரம்


கி. பி. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு விஜயம் செய்த கொஸ்மஸ் இந்நாட்டில் இடம்பெற்ற வர்த்தகம் தொடர்பாக விளக்கமளிக்கையில் கூறியவை.

> இத்தீவிற்கு இந்தியாவின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்து மட்டுமன்றி பாரசீகம், அபிசீனியா போன்ற நாடுகளில் இருந்தும் வர்த்தகக் கப்பல்கள் வந்துள்ளன.

| முற்கால இலங்கையின் பிரதான துறைமுகங்கள் | |
|---|---|
| கற்பிட்டி | ஜம்புகோளப்பட்டினம் |
| மாதோட்டம் | ஊராத்தொட்ட |
| கோகர்ண | தேவ நகர |
| | கொடவாய |

| இலங்கைக்கு வந்த வாத்தகர்களின் நாடுகள் | |
|---|---|
| உரோமம் | இந்தியா |
| பாரசீகம் | சீனா |
| அரேபியா | மலாய் |

ஜம்புக்கொளப்பட்டினம்
ஊராத்தோட்டை (ஓர்காவல்த்துறை)
மஹாதித்த
மல்வத்துஓயா
கோகண்ண
மகாவலிகங்கை
வளவை கங்கை
தேவ நகர
கொடவாய





வர்த்தகம் செய்த நாடுகளுள் மிக முக்கியத்துவம் வாய்ந்தது உரோமபுரி நாடாகும். இவர்கள் கி.பி 1ஆம் ஆண்டு தொடக்கம் கி. பி. 5ஆம் ஆண்டு வரை வர்த்தக நோக்கம் கருதி வருகை தந்தனர். மாதோட்டம், தெவிநுவர, கற்பிட்டி துறைமுகங்களிலும் அநுராதபுரம், மிருந்தலை, சிகிரியா போன்ற இடங்களில் உரோம நாணயங்கள் இதற்கு சான்றாகும்.

**இலங்கையை வேறுநாட்டினர் பல்வேறு பெயர் கொண்டு அழைத்த முறை:**

| நாட்டினர் | அழைத்தபெயர் |
|---|---|
| கிரேக்கர்<br>உரோமர்<br>இந்தியர் | தப்ரபேன்<br>செரண்டிப்<br>தம்பபண்ணி<br>இரத்தினதுவீபம். |

**இலங்கையின் புவியியல் அமைவிடம்**

1. இந்து சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்துள்ளது.
2. இந்தியாவிற்கு அருகே, ஆனால் தனியே அமைந்துள்ளது.
3. கிழக்கு மேற்குப் பட்டுப்பாதையின் கேந்திர நிலையத்தில் அமைந்துள்ளது.
4. பருவப்பெயர்ச்சிக் காற்றின் செல்வாக்கிற்கு உட்பட்ட நீரோட்டப் பாதையில் அமைந்துள்ளது.
5. இயற்கைத் துறைமுகங்களும், ஆற்றுத்துறைகளும், அதிகமாக அமைந்துள்ளது.



1வது இந்தியாவிலிருந்து முதன் முதலாக கி. மு. 6ஆம் நூற்றாண்டில் விஜயனும் அவனது சகாக்களும் குடியேறினர்.

2 வது விஜயனின் இளவரசியாக மதுராபுரியிலிருந்து அவனது சகாக்களும் வரவழைக்கப்பட்டனர்.

3 வது பண்டுவாச மன்னனும் சகாக்களும்.

4 வது பத்தகச்சானா குமாரியும் சகோதரர்களும்

5 வது மகிந்த தேரரும் மதத்தூதர்களும்.

6 வது சங்க மித்தா பிக்குனியுடன் வருகைதந்த பதினெட்டு கலைக் குழுவினர்.

இந்தியாவுடனான அரசியல் தொடர்புகளை பின்வரும் தலைப்புகளில் தொகுக்கலாம்.

* இடப்பெயர்வு * அரசாட்சிக்காகப் பெற்றுக் கொண்ட உதவிகள்.
* முற்றுகை * விவாகத் தொடர்புகள்.

## இந்திய முற்றுகை

1. தேவநம்பியதிஸ்ஸ மன்னனின் சகோதரன் சூரதிஸ்ஸ அரசன் காலத்தில் சேனன், குத்திகன் ஆகிய குதிரை வியாபாரிகளால், சூரதிஸ்ஸவை கொன்று இராசதானியை கைப்பற்றியமை.
2. கி. பி. 145இல் அசேல மன்னனை எல்லாளன் கொன்று இராசதானியைக் கைப்பற்றினன். எல்லாள மன்னன் 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.
3. வலகம்பா மன்னன் காலத்தில் தென்இந்திய ஆக்கிரமிப்பாளர்களான "பூலஹத்த" உட்பட 7 பேர் சிங்காசனத்தைக் கைப்பற்றியமை.
4. தாதுசேன மன்னன் ஆட்சிபீடம் ஏறமுன் வருகைதந்த பண்டு, பாரிந்த உட்பட ஐந்து ஆக்கிரமிப்பாளர்கள் சிங்காசனத்தைக் கைப்பற்றியமை.
5. முதலாம் சேனன் காலத்தில் வந்த ஸ்ரீ மார வல்லப என்ற பாண்டிய அரசனின் ஆக்கிரமிப்பு.
6. ஐந்தாம் மிகிந்து காலத்தில் (கி. பி. 993) வந்த இராஜ இராஜ சோழ மன்னன் இலங்கையைக் கைப்பற்றியமை.

## தென் இந்திய அரசர்களிடமிருந்து இலங்கை அரசாட்சிக்காகப் பெற்ற உதவிகள்.

1.கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் அபய நாக அரசர் தமிழ் ஆட்சியாளர்களின் உதவியை நாடியமை.
2.முதலாம் முகலன் இளவரசன் தென் இந்திய அரசனின் உதவியைப் பெற்று தனது சகோதரன் காசியப்பனுடன் போர்புரிந்து ஆட்சியைக் கைப்பற்றியமை.
3.சிறிநாக அரசன் தமிழ் ஆட்சியாளர்களின் உதவியைப் பெற்றமை.
4.மூன்றாம் அக்போ மன்னன் தமிழ் மன்னர்களின் உதவியைப் பெற்றமை.
5.கி. பி. 684 இல் மானவம்மன், பல்லவர்களின் உதவியை நாடியமை.

## விவாகத் தொடர்பால் வெளிநாட்டுத் தொடர்பு

- விஜயன் மதுராபுரியில் இருந்து அரசியை வரவழைத்தமை.
- பண்டுவாசுதேவன் 'சாக்கிய' வம்சத்தைச் சேர்ந்த பத்தகச்சானாவை வரவழைத்து திருமணம் புரிந்தமை.

### யுத்த சம்பவங்கள்

1.வங்க நாசித திஸ்ஸ மன்னன் காலத்தில் சோழ மன்னர் எமது நாட்டை முற்றுகையிட்டு 12ஆயிரம் சிங்களவர்களை சிறைப்படுத்தி இந்தியாவிற்கு கொண்டுசென்றான்.

2.இதற்குப் பழிக்குப்பழியாக அவனது மகன் கஜபா மன்னன் கி. பி. 112 இல் சோழநாடு சென்று யுத்தம் புரிந்து 12 ஆயிரம் பேரை மீட்டு மேலதிகமாக 12 ஆயிரம் பேரை இங்கு கொண்டு வந்து குடியேற்றினான்.

3.முதலாம் பராக்கிரம பாகு மன்னன் பாண்டிய நாட்டை ஆக்கிரமித்து அங்கு சிறைப்பட்டோரை இங்கு கொண்டு வந்து குடியேற்றினான்.

4.இந்தியாவை மட்டுமன்றி பர்மாவையும் முற்றுகையிட்டான்.

இலங்கையின் எழுத்துமுறை, மொழி, கலாச்சாரம், வேறு பலதரப்பட்ட கலைகள் வளர்வதற்கு இந்தியாவுடனிருந்த தொடர்புகளே காரணமாயிற்று.

### கலாசாரத் தொடர்புகள்

1. தீச மன்னனுடன் கொண்டிருந்த நட்பினால் கி. மு. 247இல் எமது நாட்டுக்கு புத்த சமயம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் விளைவாகவே பிரதான கலாசாரத் தொடர்பு ஏற்பட்டது.

2. தொடர்பு

| | | |
|---|---|---|
| குப்த காலத்திற்குரிய அஜந்தா சுவர் ஓவியம் | சீகிரிய ஓவியங்கள் | அசோக கல்வெட்டில் உள்ள பிராமிய எழுத்துக்கள் |

### கலாசாரத் தொடர்புகளால் ஏற்பட்ட விளைவுகள்

1. அசோக மன்னனால் எமது நாட்டிற்கு முடிசூடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
2. கீர்த்திசிறி மேவன மன்னனால் (கி. பி. 301 – 328) இலங்கை யாத்திரிகர்களுக்காக புத்த கயாவில் ஓய்வுமண்டபம் அமைக்கப்பட்டது.
3. ‘புனித தந்ததாது’ ஹேமாலா தத்த இளவரசனால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது.
4. தென் இந்திய அமராவதி செதுக்கல்கள், வார்ப்புக்கள் என்பனவற்றின் செல்வாக்கிற்கும் இலங்கை உட்பட்டுள்ளது.

### பௌத்த நாடுகளுடனான தொடர்புகள்

1. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் சீன இனத்தவரான பாகியன் பிக்கு, அபயகிரி விகாரையில் 3 ஆண்டுகள் தங்கியிருந்தான்.
2. கி. பி. 718 இல் வப்ரபோதி என்ற பெயருடைய தென் இந்திய பிக்கு வந்தார்.
3. முதலாம் விஜயபாகு மன்னன் பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைத்து “உப சம்பதா” என்ற சடங்கினை நடாத்தினான்.



## இந்துக் கலாச்சாரத்தின் செல்வாக்கு

1. தென் இந்திய வருகைகளும், முற்றுகைகளும் காரணமாக இந்துக் காலச்சாரம் இலங்கையில் ஏற்பட்டது.

2. சோழர் காலத்தில் பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட சிவாலயக் கட்டடங்கள் இந்துக் கலாச்சாரத்திற்கு உட்பட்டவை யாகும்.

3. தொல்பொருளியல் அகழ்வுகளில் இந்துக் கடவுள்களின் சிலைகள் இலங்கையின் பல பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டன.
(கொழும்பு அல்லது கண்டியில் அமைந்துள்ள நூதன சாலையைப் பார்வையிடச் செல்லும் சந்தர்ப்பத்தில் இந்துக் கடவுள்களின் சிலைகளைப் பாருங்கள்.)

## முஸ்லிம்களின் செல்வாக்கு

1. கி. பி. 13ஆம் நூற்றாண்டளவில் முஸ்லிம்கள் இங்கு வந்தனர்.
2. இதனால் இஸ்லாம் மதமும் கலாச்சாரமும் கரையோரப் பகுதிகளில் முதலாவதாகப் பரவியது.
3. புத்தளம், சிலாபம், பேருவளை, அளுத்கமை, காலி, வெலிகம, அம்பாந்தோட்டை மட்டக்களப்பு, கல்முனை, சம்மாந்துறை பகுதிகளில் முஸ்லிம்களின் செல்வாக்கு அதிகரித்து குடியேற்றங்கள் தொடங்கின.

## வியாபாரத் தொடர்பு

### இலங்கையின் புராதன வியாபாரத் தொடர்பு

வியாபாரத் தொடர்பு ———————— ஆரியரிடமிருந்து இலங்கை இயக்க, நாக வம்சத்தினர் பண்டங்களைப் பரிமாறிக்க கொண்டனர்.

### வர்த்தகத் தொடர்பு நிகழ்வுகள் சில

1. இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு யானைகள் அனுப்பப்பட்டன.
2. விஜய மன்னனும், தேவநம்பிய தீச மன்னனும் பரிசப் பொருட்களாக முத்து, மாணிக்கம் என்பவற்றை தூதுவர் மூலம் இந்தியாவிற்கு அனுப்பினர்
3. வியாபாரத்திற்காக மகாதித்த (மாதோட்டம்), ஜம்புகோளப்பட்டினம், (தம்ப கொளப்பட்டுன) ஆகிய துறை முகங்கள் அதிகம் பயன் படுத்தப்பட்டன.
4. மகாதித்த (மாதோட்டம்) துறைமுகத்தில் உரோம நாணயங்கள், உரோம, அராபிய சீன பாத்திரங்களின் சிதைவுகள், மணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
5. இலங்கையின் துறைமுகங்களில் பாரசீக, எதியோப்பிய கப்பல்கள் நிறுத்தப்பட்டிருந்தன.
6. கிரேக்க வியாபாரிகள் இந்தியாவிற்கு வந்து இலங்கையின் வியாபாரப் பொருட்களை கொண்டு சென்றனர்.
7. ‘பாதிகாபய’ மன்னன், உரோமக் கப்பல் தலைவனுடன் வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தான்.

8. பர்மா, மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் இலங்கை வியாபாரத் தொடர்புகளைக் கொண்டிருந்தது.

9. 12ஆம் நூற்றாண்டில் இலங்கை வியாபாரிகள் பர்மா நாட்டுடன் தொடர்பு வைத்திருந்தனர்.

| புராதன இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப் பட்ட பொருட்கள் | புராதன இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள். |
|---|---|
| | |

10. குளோடியஸ் மன்னன் காலத்தில் உரோமுக்குச் சென்ற தூதுக் குழுவினர் பவளங்களைக் கொண்டு வந்தனர். அதைக் கொண்டு ருவன்வலி சாயாவை அலங்கரித்ததாக மகாவம்சம் கூறுகிறது.

11. சீகிரியா சர்வதேச வர்த்தக மத்திய நிலையமாகத் திகழ்ந்ததாக சீகிரிய அகழ்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

12. கி. பி. 1344 இல் இப்னு பதூதா முஸ்லிம் பயணியும் இலங்கைக்கு விஜயம் செய்தார்

| வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வந்த பொருட்கள் | இலங்கையிலிருந்து வெளிநாட்டிற்குக் கொண்டு சென்ற பொருட்கள் |
|---|---|
| பீங்கான் விசிறி பொருட்கள்,<br>கற்பூரமும், வாசனத் திரவியங்களும்<br>துணி வகை. முத்து, பவளம், குதிரைகள்,<br>அலங்கார மட்பாத்திரங்கள் கம்பளங்கள். | யானையும், யானைத் தந்தமும்,<br>முத்துக்கள், மாணிக்கங்கள், கடலாமை ஓடுகள்,<br>பல சரக்கு, பருத்தித் துணி. |

| புராதன கால வர்த்தகத் தொடர்புகளால் ஏற்பட்ட சாதக நிலைமைகள் | புராதன கால வர்த்தகத் தொடர்புகளால் ஏற்பட்ட பாதக விளைவுகள் |
|---|---|
| 1. கலாச்சாரம், பொருளாதாரம் பெருமளவு முன் னேற்றம். | 1. இனங்கள் வந்து குடியேறியதில் ஒரு சிலருக்கிடையே புரிந்துணர்வுகள் குறைந்து சண்டை சச்சரவுகள் ஏற்பட்டமை |
| 2. சிங்கள அரிச்சுவடி முறை அறிமுகம் | 2. கலப்புத் திருமணங்கள் நடைபெற்றமை. |
| 3. மொழி, இலக்கியம், கலைத்திறன் என்பன விருத்தி அடைந்தமை | 3. சோழ கலிங்க படையெடுப்புக்களின் போது இராசரட்டையில் குளங்கள், வழிபாட்டுத்தலங்கள், பௌத்த தர்மம் எழுதப்பட்ட ஏடுகள், புத்தகங்கள் பெருபான்மையாக அழிவுக்கு உட்பட்டமை |


**2.2. செயல்நெறி**

1. பின்வரும் வாக்கியங்களில் உள்ள இடை வெளிக்கு மிகபொருத்தமானதை புள்ளிக் கோட்டில் எழுதுக.


1. கலாச்சாரத் தொடர்புகளான பொருளாதார ................................. என்பன இருந்தன.
2. சீன வியாபாரிகள் கொண்டுவந்த ................................. பாரசீக வியாபாரிகள் வாங்கினர்.
3. சீன இன பாகியன் எனும் தேரர் கி. மு. ..................... அளவில் இலங்கைக்கு விஜயம் செய்தார்.
4. கிரேக்கர் இலங்கையை ................................. என அழைத்தனர்.
5. சூரதிஸ்ஸ அரசனை ........................... ஆகியோர் கொன்றனர்.
6. மூன்றாம் அக்போ மன்னன் ........................ உதவியைப் பெற்றான்.
7. திருமண உறவுகள் காரணமாக ........................... தொடர்பு வலுவடைந்தது.
8. கஜபாகு மன்னன் ......................... சோழ நாடு சென்று யுத்தம் புரிந்தான்.
9. கலை, கலாச்சாரம் வளர ........................ உதவியாக இருந்தன.
10. இந்தியாவின் குப்த காலத்திற்குரிய ஓவியம் ..................... ஆகும்.
11. அசோக மன்னன் ............................ எனப் புகழப்பட்டான்.
12. சீன இனத்தவரான பாகியன் பிக்கு ................................ மூன்றாண்டுகள் தங்கியிருந்தார்.
13. இலங்கை ~ இந்திய வர்த்தக உறவுகள் ................................. அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளன.
14. இலங்கை ~ உரோம வர்த்தக உறவுகள் ................................ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
15. இஸ்லாம் மதத்தினர் ........................... குடியேற்றங்கள் அமைத்தனர்.

2. கீழ்க் காணும் படங்களை குறிக்குக.

1. இலங்கையுடன் புராதன வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட நாடுகளை தேசப்படத்தில் குறிக்குக.



2. பின்வரும் இலங்கைப் படத்தில் புராதன துறைமுகங்களைக் குறிப்பிடுக.



3. கீழ்க் காண்பவற்றுக்கு விடை தருக.

3. இலங்கையை பல்வேறு இனத்தினர் அழைத்த பெயர்களைத் தருக.

.................................................................................................................................

4. இலங்கைக்கு வருகை தந்து குடியேறியோரைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

5. 'இந்திய முற்றுகை' பற்றி நீர் தெரிந்ததைக் கூறுக.

.................................................................................................................................

6. புத்தசமயம் பரவியமை பற்றி நீர் அறிந்ததைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

7. இந்துக்களின் வருகையால் இலங்கையில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

.................................................................................................................................

8. வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட பொருட்கள் யாவை?

.................................................................................................................................

9. பல்வேறு இன மக்களால் இலங்கைக்கு ஏற்பட்ட தீமை யாது?

.................................................................................................................................

4. (1) அட்டவணையைப் பூர்த்தி செய்க

| | நாடுகள் | இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பொருட்கள் | இலங்கையிலிருந்து எடுத்து செல்லப்பட்ட பொருட்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

(2)

| இலங்கையை ஆண்ட அரசர்கள் பெயர் | ஆண்டு வருடம் | ஆற்றிய தொண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(3) இலங்கையின் புராதன தொடர்புகளைப் பற்றிக் கூறியோர்களும் வரலாற்று நூல்களும்.

| வரலாற்றாசிரியர்கள் | வரலாற்று நூல் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(4) இலங்கையின் புராதனகாலத் துறைமுகங்கள் அழைக்கப்பட்ட பெயர்களையும் அவற்றின் தற்காலப் பெயர்களையும் தருக.

| | புராதனகாலப் பெயர்கள் | தற்காலப் பெயர்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

(5) புராதன கால அகழ்வு ஆராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களையும் அகழ்வுகள் நடந்த இடங்களையும் குறிப்பிடுக.

5. கீழ்க்காணும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமானத்தை தெரிவுசெய்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. அகழ்வாய்வுகளினால் கிடைத்த தகவல்களின்படி பின்வரும் இடங்களில் புராதன காலத்தில் பூங்காவை அமைக்கும் கலைக்குச் சிறந்த உதாரணமாகக் காணப்படுவது எது?
   (i) யப்பகூவா (ii) சீகிரியா (iii) கோட்டை (iv) தம்பதேனியா

2. 1453 இல் கொன்ஸ்தாந்துநோபிளைத் துருக்கியர் கைப்பற்றியபோது, இலங்கையில் ஆட்சி செய்த அரசன் யார்?
   (i) துட்ட கெமுனு (ii) முதலாம் விஜயபாகு
   (iii) இரண்டாம் பராக்கிரமபாகு (iv) ஆறாம் பராக்கிரமபாகு

3. இலங்கை விவசாயத்தில் மழையை நம்பியிருப்பதிலும் பார்க்க நீர்ப்பாசனத்தை நம்பவதனால் நெற்பயிர்ச் செய்கையில் கூடிய அறுவடையைப் பெற முடியும். இதற்குக் காரணம் என்ன?
   (i) தேவைப்படும் போது தேவையான அளவு நீரினைப் பெறக் கூடியதாயிருத்தல்
   (ii) எல்லாப் பிரதேசங்களுக்கும் சம அளவு நீரினை வழங்கக் கூடியதாயிருத்தல்
   (iii) நீரின் உச்ச அளவினைப் பெறக்கூடியதாயிருத்தல்.
   (iv) மழை நீரில் உப்புத்தன்மையின் அளவு அதிகமாக இருத்தல்.

4. இலங்கை, இந்திய உப கண்டத்திலிருந்து பிரிந்து காணப்படுகின்றது. இவ்வாறு அமைந்திருப்பதனால், நமது வரலாற்றில் இடம் பெற்றுள்ள விசேடத் தன்மை எது?
   (i) எப்பொழுதுமே தென் இந்தியச் சாம்ராச்சியங்களுக்கு இலங்கை கீழ்ப்பட்டிருந்தமை.
   (ii) தென்னிந்தியக் கலாச்சாரம் இலங்கையில் பரவியமை.
   (iii) இந்தியாவின் செல்வாக்கு இடம்பெற்ற போதிலும் இலங்கைக்கென்று தனித் தன்மையொன்று விருத்தியடைந்தமை.
   (iv) பலம் பொருந்திய சிங்கள மன்னர்கள் இந்தியா மீது படையெடுத்தமை.

5. பின்வருவனவற்றுள் எது, இலங்கையை ஒரு பல்லின நாடாக ஆக்குவதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது?
   (i) புராதன காலம் முதல் ஆட்சியாளர்கள் மக்கள் குடியேற்றம் தொடர்பாக திறந்த கொள்கையைப் பின்பற்றியமையாகும்.
   (ii) இலங்கையின் அமைவிடம் காரணமாக காலத்துக்குக் காலம் பல்வேறு மக்கட்கூட்டத்தினர் இங்கு வந்து குடியேறியமையாகும்.

(iii) இலங்கை, பருவப் பெயர்ச்சி மழைப் பாங்கு செயற்படும் வலயத்திலுள்ள தீவாக இருத்தலாகும்.
(iv) உலகிலேயே மிகச்சிறந்த கறுவாயைப் பெறுவதற்காக வியாபாரிகள் இங்கு வந்தமையாகும்.


6. பின்வருவனவற்றுள் எது, இலங்கையை ஒரு பல்லின நாடாக ஆக்குவதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது?
(i) புராதன காலம் முதல் ஆட்சியாளர்கள் மக்கள் குடியேற்றம் தொடர்பாக திறந்த கொள்கையைப் பின்பற்றியமையாகும்.
(ii) இராசரட்டைப் பிரதேசத்தை இராஜேந்திரசோழன் கைப்பற்றியமையாகும்.
(iii) கரையோரப் பிரதேசங்களைப் போர்த்துக்கேயர் கைப்பற்றியமையாகும்.
(iv) தேரர், மகிந்தர், இலங்கைக்குப் பௌத்தமதத்தைக் கொண்டு வந்தமையாகும்.

7. மத்தியதரைக்கடலைச் சூழ்ந்திருக்கும் நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்குமிடையில் வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டது.
(i) நாடுகாண் பயணங்களின் பின்னராகும். (ii) மறுமலர்ச்சியின் பின்னராகும்.
(iii) மத்தியகாலப்பகுதியின் இறுதியிலிருந்தாகும். (iv) மத்திய காலப்பகுதிக்கு முன்னராகும்.

8. தாதுசேனமன்னன் கட்டிய கால வாவியிலிருந்து திசாவாவிக்கு நீரைக்கொண்டு செல்வதற்குக் கட்டப்பட்ட ஜெயகங்கை அல்லது யோத அல கால்வாய் ஒரு மைலுக்கு ஒரு அங்குலம் சாய்வுடையதாக அமைகின்றது இதனால் ஏற்பட்டுள்ள சிறப்பு என்ன?
(i) தாது சேனனினால் காலவாவி கட்டப்பட்டது.
(ii) அக்காலத்திலிருந்த நீர்ப்பாசனத் தொழில் நுட்பம் உயர்வானது.
(iii) காலவாவியில் கிடைக்கும் அதிக நீரைத் திசாவாவிக்கு எடுத்துச் செல்லல்
(iv) வருடம் முழுவதும் நீரைப்பெறும் காலவாவியிலிருந்து வரண்ட வலயத்துக்கு நீரைக் கொண்டு செல்லல்

9. இலங்கை அரசினது ஆட்சியைப் பலவீனமடையச்செய்து உறுதியற்றதாக்கவதற்கு வழிவகுத்த சந்தர்ப்பங்களைக்கொண்டுள்ள விடை எது?
(A) பத்தகச்சானாவும் அவருடைய பரிவாரமும் வந்தமை
(B) சேனன், குத்திகன் எனும் குதிரை வியாபாரிகள் வந்தமை
(C) புல கண்டனும் அவனது குழுவினரும் வந்தமை
(D) தீகாயும் அவனது தோழர்களும் வந்தமை
(E) பண்டு, பாரிந்தன் ஆகியோரும் அவர்களது கூட்டத்தினரும் வந்தமை.
(i) ABC (ii) BCD (iii) CDE (iv) BCE

6. கீழ்க்காணும் வினாக்களுக்கு படங்களின் உதவியுடன் விடை எழுதுக அல்லது குறிக்குக.
1. தரப்பட்டுள்ள படத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சில இடங்களும்பிரதேசங்களும் 1~7 வரையான இலக்கங்களினால் காட்டப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய இலக்கங்களைத் தெரிவு செய்து, புள்ளிக்கோட்டிட்ட இடங்களில் எழுதுக.





(a) புராதன காலத்தில் இலங்கை அரச வம்சத்துடன் தொடர்புகள் வைத்திருந்த பாண்டிய தேசம் ..............................
(b) உருகுணை இராச்சியத்தின் தலை நகரம் ..............................
(c) சோழதேசம் ..............................

2. (i) அருகிலுள்ள படத்தில் தங்காலை, பேருவளை, மிரிஸ்ஸ ஆகிய மீன் பிடித்துறைமுகங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அத்துறை முகங்களை A B C என்ற ஒழுங்கில் பெயரிடுக.

A: ....................................................................

B: ....................................................................

C: ....................................................................




3. (i) அருகில் தரப்பட்டுள்ள படத்தில் இலங்கைக்கு வருகை தந்தவர்கள் பயன்படுத்திய புராதன துறைமுகங்கள் மூன்று காணப்படுகின்றன. அவற்றை ABC ஒழுங்க வரிசையில் பெயரிடுக.

(ii) கீழே தரப்படும் அட்டவணையில் பண்டைக் காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திய குடிவரவு, படையெடுப்பு சம்பவங்கள் தரப்பட்டள்ளன.

~ பத்தகச்சானாவும் அவரது குழுவும்

~ குதிரை வியாபாரிகளான சேனக, குத்திக

~ எல்லாளனும் அவனது குழுவினரும்


~ புலஹத்த உள்ளடக்கிய குழு

~ தேர மகிந்தவும் அவரது சீடர்களும் தர்ம தூதுவர்களும்

~ பாண்டு வாசு தேவாவும் அவர் குழுவினரும்.

மேற்கூறிய சம்பவங்களைப் பயன்படுத்தி குடிவரவுக்கு இரண்டு சம்பவங்களையும் படையெடுப்புக்கு இரண்டு சம்பவங்ளையும் தருக.

(iii) 13 ஆம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில் ஏற்பட்ட படையெடப்புக்கு பின் பொலன்னறுவை நகரமாக இருப்பதிலிருந்து மாறத் தொடங்கியது. அதற்கான காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.




4. 1. படத்தில் அம்புக்குறியினால் காட்டப்படும், இலங்கையின் கரையோரப் பகுதியிலுள்ள பிரசித்திபெற்ற முனை யாது?

(i) பனை முனை (ii) சங்கமன்கந்தை முனை

(iii) பவுல் முனை (iv) இராட்சத முனை

2. தேவநம்பியதீசனால் கட்டப்பட்ட திசவாவியைக் குறித்துக் காட்டும் இலக்கம் எது? (i) 1 (ii) 2 (iii) 3 (iv) 4

3. டச்சுக்காரர் காலத்தில் பிரசித்தி பெற்ற காலிக்கோட்டை எவ்வெழுத்தினால் குறித்துக் காட்டப்படுகிறது?

(i) N (ii) O (iii) P (iv) R

4. எந்த நீர்ப்பாசனத்திட்டம் J எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது.


(i) வுஹகம் வெகர நீர்த்திட்டம் (ii) முதுகண்டிய நீர்த்திட்டம்

(iii) நில்வளவை நீர்த்திட்டம் (iv) சமனல நீர்த்திட்டம்



# 3. கண்டி இராசதானி


## 3.1 பாடப்பொழிப்பு




தலதா மாளிகை கண்டி நகரிலே அமைந்துள்ளது. இங்கு விசேடமாகக் கண்டிப் பெரஹரா வருடந்தோறும் நடைபெறும் ~ கண்டி மலைநாட்டு இராசதானியின் புவியியல் பின்னணி ஏனைய பிரதேசங்களைவிட வித்தியாசமானது.

இதன் அழகு

மலையிலிருந்து பெருக்கெடுத்தோடும், நதிகளும், நீரோடைகளும், நீர்வீழ்ச்சிகளும், இயற்கை அழகை மேம்படுத்தும். மேலும் நீர் அரண், வன அரண், மலைஅரண் போன்ற இயற்கையான பாதுகாப்புப் பிரதேசத்தைப் படத்தில் பாருங்கள்.



## கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பு

கண்டி இராச்சியத்தில் அதன் தலைவன் அரசனேயாவான். நாட்டின் சகல நிலங்களின் உரிமையும் அவனுக்கே சொந்தம். இந்த அரசனால் நியமிக்கப்பட்ட குழு மக்களுக்கு உதவி புரியும். அரசன் முடிவுகள் எடுப்பதற்கு முன்பு பிரதான அதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பான். அரசன் பிரபுக்கள் அடங்கிய மலையக அரசு சபை "மாகா அமைச்சு மண்டபம்" எனும் பெயரில் அழைக்கப்பட்டது. இவ்வரசுசபை மகவாசல, மாகா மந்திரிசபை எனவும் அழைக்கப்படும் நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக இராசதானி பல பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

கண்டி அரசன்

திசவானி நிலமே, பஸ்நாயக்க நிலமே

திசாவைகள் | ரட்டமாகாத்மாயாக்கள் | கோரளைகள் | முகாத்திரங்கள்

இவர்கள் அனைவரும்
நாட்டுப் பகுதி
கிராமப்பகுதி
பட்டத்து மாளிகைப்பகுதி
விகாரைச் சொத்துகள்
என்பவற்றை பரிபாலித்தனர்

### நாட்டுப் பகுதி

நிர்வாக நடவடிக்கைகளை இலகு படுத்திக் கொள்வதற்காக இராசதானி பல பிரதேசங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. பிரதேசங்களின் நிர்வாக நடவடிக்கைகளை நாட்டுப் பகுதி (ரட்ட வசம) என்னும பிரிவாலே நடைபெற்றன. அதன் நிர்வாகத்தலைவர் அதிகாரி எனப்பட்டார்.

இவர்

நேர்மை நிலை நாட்டல்
வருமானத்தை சேகரித்தல்
அரச கட்டளை செயற் படுத்தல்
விகாரை தூய்மையாக வைத்திருத்தல்
எனும் பொறுப்புகள் இருந்தது.

### கிராமப் பகுதி

கிராமப் பகுதி (பத்தே) என்று கூறப்பட்ட செயலணி மூலம் வரியைச் சேகரிக்கும் வேலை நடைபெற்றது. சேற்று வரி, சுண்ணாம்பு வரி, பெரும் வரி, உப்பு வரி போன்ற வரிகள் கிராம விதானைமாரால் அறவிடப்பட்டன.


### பட்டத்து மாளிகைப் பகுதி

அரச மாளிகை நடவடிக்கைகளை திட்டமிடல், பட்டத்து மாளிகைசெயலணி மூலம் நடைபெற்றது. இங்கு யானைகள் பராமரிப்போர், கொடியேற்றுவோர், அரச களஞ்சியத் தலைவர்கள் வேலை செய்தனர்.

## விகாரைச் சொத்துக்கள்

விகாரைச் சொத்துக்கள் ஏனைய நடவடிக்கைகள் செயலணி மூலம் நடைபெற்றது இச்செயல்கள் யாவும் தியவன நிலமேமார்களும், தேவாலயங்களின் பிரதானிகளும் பொறுப்பாய் இருப்பார்.

வழக்கு விசாரணை செய்வது அரசன் மட்டுமே. குற்றவாளிகளுக்கு வழங்கும் தண்டனைகளை கீழுள்ள படத்தில் பாருங்கள்.



1. கையால் அறைதல்
2. கசையடி (தென்னைக் குலைக் காம்பினால் அடித்தல்)
3. பலகையில் வைத்து ஆணி அறைதல்
4. அடைத்து வைத்தல்
5. நாடு கடத்துதல்
6. தலைமுடியை வெட்டுதல்
7. இழி குலத்துக்குள் அனுமதித்தல்
8. கொல்லுதல் (நீரில் அமிழ்த்திக் கொல்லுதல், யானையால் கொல்லுதல்)

## கண்டி இராசதானியின் சமூக நடவடிக்கைகள்

பண்டைய மலையகச் சமூகமானது பிரதானமாக கிராமிய சமூகமாகவே காணப்பட்டது.

1. பிரபுக்கள் வசித்த வீடுகள் சுவர்கள், யன்னல்கள், கதவுகள் வைத்து, சுண்ணாம்பு அடித்து கூரைக்கு ஓடு போடப்பட்டிருந்தது. ஏழைகள் (சாதாரண மக்கள்) வீடு கிடுகினால் கூரைபோட்டு மண்ணினால் திண்ணை வைத்து கட்டப்பட்டிருந்தது.

நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையானதை அவர்களே செய்து நிறைவுகண்டனர். உ+ம் கத்தி, மண்வெட்டி: உற்பத்தியில் கொல்லர்களும், மட்பாண்ட உற்பத்தியில் குயவர்களும் முன்னின்றனர்.

## காணி உரிமை

அநேகமான சமூகத் தொடர்புகளும், பழக்க வழக்கங்களும் காணி உரிமையின் அடிப்படையில் அமைந்திருந்தது.

## கபாடகம்

அரச மாளிகையின் உபயோகத்திற்காக ஒத்துக்கப்பட்ட விசேட இடம் கபாடகம் எனப்படும்.

## நிந்தகம்

அதிகாரம், திசாவை போன்ற உயர் பதவிகளை வகித்தவர்கள் வழங்கிய சேவைக்காக அவர்களுக்கு அரசனால் வழங்கப்பட்ட நிலங்கள் நிந்தகம் எனப்படும்.

## விகாரைக் காணிகள்

பரம்பரை பரம்பரையாக கைமாறும் நிலங்கள் இதுவாகும்.

## மானிய நிலங்கள்

சாதாரண மக்கள் பயன்படுத்திய நிலங்களே மானிய நிலங்கள் எனப்பட்டன.

## கண்டி இராச்சியத்தில் காணப்பட்ட விவாக முறைகள்

* நீள் திருமணம் (மணமகளை மணமகன் வீட்டிற்குக் கூட்டிச் செல்லல்)
* பதிதற்திருமணம் (மணமகன் மணமகள் வீட்டில் தங்குதல்)
* பல புருஷ திருமணம் (ஒரு பெண்ணுக்கு பல சகோதரர்கள் / கணவர்களாக ஒரே வீட்டில் வசித்தல்)

## சமூக அமைப்பில் பௌத்த பிக்குகள்

பண்டைய மலையக சமூக அமைப்பில் பௌத்த கோயில்களுக்கும், அங்கிருந்த பௌத்த பிக்குகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

## கண்டி இராசதானியின் பொருளாதார அமைப்பு

இராசதானியின் விவசாய, பொருளாதார முறை முக்கியத்துவம் பெற்றிருந்தது. வர்த்தகம், பண்டமாற்று முறையை அடிப்படையாகக் கொண்டே அமைந்தது. நெல் போதாமையால் பலா, ஈரப்பலா, கிழங்கு உணவாக இருந்தன. விவசாய உபகரணங்கள், வீட்டு உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. பசு, எருமை வளர்ப்பும் நடைபெற்றது.

அரச கரும அதிகாரிகளும் வியாபாரிகளும் போக்குவரத்துச் செய்ய ஒற்றையடிப் பாதை அமைக்கப்பட்டது. சிறு கடைத் தெருக்களும் ஏற்படுத்தப்பட்டு புடைவை, புகையிலை, சுண்ணாம்பு, மருந்து, ஆயுதம், மட்பாண்டம், உலோகப் பாண்டம் என்பன விற்கப்பட்டன.

## கண்டி இராச்சியத்தின் கலாசார அமைப்பு

கண்டி மலையக இராசதானி சுயாதீனத்திலும்,கலாச்சாரத்திலும் கேந்திர நிலையமாக அமைந்திருந்தது. எனினும் அரசியல் பிணக்குக் காரணமாக சமய, கல்வி வளர்ச்சி பாதிக்கப்பட்டன. கி. பி. 1739இல் நாயக்க அரச வம்சத்தவர்கள் கண்டி ஆட்சியைக் கைப்பற்றினார்கள். இந்து சமயத்தவர்களான நாயக்கர் பௌத்த சமயத்திற்கு மாறிக்கொண்டாலும் இந்து மதவழிபாட்டை கைவிடவில்லை. தலதா மாளிகையில் இன்றும் இந்து மத வழிபாடு உண்டு. இதற்கு இங்குள்ள நான்கு ஆலயங்கள் சாட்சியாகும்.

## கண்டியில் கல்வி

1. இங்கு கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது முதலாம் விமலதர்ம சூரியன் (1592 – 1604).
2. வெலிவிட்ட சிறி சரணங்கர தேரர் புத்த சமய வளர்ச்சியை ஏற்படுத்தினார்.

## கலைகளும் தேசியக் கைத்தொழில்களும்
### சித்திரக் கலை

சித்திரக் கலை மிக மிக வளர்ச்சி பெற்றிருந்தது. இக்கால ஓவியங்களுள் "மாறனை வென்றமை", "தர்மசக்கர பரிவர்த்த சூத்திரப் போதனை", "வெஸ்ஸந்தர ஜாதக போன்றவை" முக்கிய தொனிப் பொருளாகும்.

கங்காராமை, பம்பரகல, லங்காதிலக, தலதா மாளிகை, தெகல தொருவை, மெதவெல, ரிதி விகாரை போன்றவைகளில் இன்றும் கண்டி காலத்திற்குரிய சித்திரங்களைக் காணலாம்.

பண்டைய சித்திரக் கலைக்கும் மலையக சித்திரக் கலைக்கும் இடையில் (பின்னணி அமைப்பில்) சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

### மலையக செதுக்கல் கலை

இக் கல்வெட்டுக்களில் கல், பலகை, யானைத் தந்தம் ஆகியவற்றைப் பயன்படுத்தி செதுக்கப்பட்டது. இதில் அம்பக்கெ தேவாலயம் பிரசித்திபெற்றது.

| யானத்தந்தத்தினால் உருவாக்கப்பட்டவை | தங்கம், வெள்ளி, பித்தளையால் உருவாக்கப்பட்டவை |
| --- | --- |
| சீப்பு, வளையல், நகைப்பெட்டி | விளக்கு, பேனை, கெண்டி, தட்டுகள் |

அநேகமான சித்திரங்களில் அமுதசுரபி, அன்னாசனம், அன்னாசி போன்றவை காணப்படுகின்றன .

மேலும்

சுதேச கைத்தொழில்களும் விருத்தியடைந்திருந்தன. மட்பாண்டத் தொழில், பருத்தித் துணி நெய்தல் போன்றவையும் எம்பிரொய்டரி எனும் அலங்கரிப்பும் இக்காலத்திலேயே உருவாக்கப்பட்டது.

### தொழில்களும் பிரசித்தி பெற்ற இடங்களும்

| தொழில் | இடம் |
| --- | --- |
| பாய் பின்னல் | தும்பறமிட்டியாவத்த |
| இரும்பு | கொத்மலை |
| பித்தளை | சிரிவுல (உடுநுவர) |

### இலக்கியத்துறை

இராஜதோத்திர சிங்கள காவியங்களாவன

- "இராஜசிங்க சிரித,
- இராஜசிங்க வர்ண
- இங்கிரீசி சட்டன"

### போர்த்துக்கேயருக்கும் கண்டிய அரசுக்கும் இடையில் இருந்த தொடர்பு

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இராசதானி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கண்டி இராசதானி, சேனா சம்மத விக்கிரமபாகு என்ற அரசனால் ஆளப்பட்டது.

போர்த்துக்கேயர் மலையக அரசுடன் தொடர்புகொள்ளக் காரணமானவை:

1. வியாபாரம் தொடர்பாக கறுவாவைப் பெற்றுக்கொள்ளுதல்.
2. மலையகத்தில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புதல்.

போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தை ஆண்டுகொண்டிருந்த போதிலும் மலையகத்திலும் தமது அதிகாரத்தைப் பரப்ப முயற்சி எடுத்துக் கொண்டிருந்தனர். இவர்களின் முயற்சியை முதலாம் விமலதர்ம சூரியன் (1592 – 1604) யுத்தம் செய்து முறியடித்தான். எனினும் மீண்டும் போர்த்துக்கேயர் மலையக மக்களுடன் **தந்துரே** எனும் இடத்தில் போர் புரிந்தனர். இது ஓர் முக்கிய போராகக் கருதப்படுகிறது.

'தந்துரே' போரில் வெற்றி பெற்ற விமலதர்மசூரிய மன்னன், குசுமாசனாதேவியை மணந்து மலையக மன்னன் ஆனான். தந்துரே போர் மலையக வரலாற்றில் மாத்திரமன்றி இலங்கையில் நடைபெற்ற அதி உறுதியான போர்களில் ஒன்றாகும்.

விமலதர்ம சூரியனைப் பழிவாங்கப் போர்த்துக்கேயர் பலமுறை போர் செய்தும் ஈற்றில் தோல்வியைத் தழுவிக்கொண்டனர். பின்னர் ஒல்லாந்தருடன் விமலதர்மசூரியன் தொடர்பை ஏற்படுத்தினான். இவன் 1604 இல் மரணமடைந்தான். பின் செனரத் ஆட்சியை ஏற்று நடத்தினான்.

### செனரத் மன்னனின் ஆட்சியில் காணப்பட்ட வளர்ச்சி

* ஏழு கோறளை
* நான்கு கோறளை
* மூன்று கோறளை
* சபரகமுவா
* திருகோணமலைத் துறைமுகத்தை அண்டிய எல்லாப் உப பிரதேசங்களும்
* கிழக்கு, தென் கிழக்குத் திசைகளில் வன்னி அரசனின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பிரதேசங்கள்

போர்த்துக்கேயர் செய்த நாச வேலைகளால் கண்டி **இராச்சிய வளர்ச்சி** பெரிதும் பாதிப்படைந்தது. 1638ல் இரண்டாம் இராசசிங்கன் ஆட்சிக் காலத்திலும் போர்த்துக் கேயர் மலையகத்துடன் போர் தொடுத்து தோல்வி அடைந்தனர்.

### கண்டி இராச்சியத்துடனான ஒல்லாந்தர் தொடர்பு

1. கி. பி. 1602 ஆல் ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்தனர்.
2. மலையகத்துடன் கி. பி. 1638 இல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர்.
3. இரண்டாம் இராசசிங்கன் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து விரட்டுவதற்கு ஒல்லாந்தரின் உதவியைப் பெற்றான். இதனால் 1938 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் ஏற்பட்டது.

### ஒல்லாந்தரின் பிரதேச எல்லைகள் 1658 – 1670
### 1638 ஒப்பந்தத்தில் உள்ள வாசகங்கள்

1. போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து துரத்துவதற்கு இரண்டாம் இராசசிங்கனுக்கு உதவி செய்ய வேண்டும்.
2. யுத்த செலவினங்களை அரசன் ஏற்றுக் கொள்ள வேண்டும். செலவினங்களை அரசன் கொடுத்த பின்பு அரசனுக்கு மீண்டும் கோட்டையை ஒப்படைத்தல் வேண்டும்.
3. ஒல்லாந்தர்களுக்கு துறைமுகங்களையும் வர்த்தக தனியுரிமைகளையும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

1. ஒல்லாந்தர் கி. பி. 1639 இல் திருகோணமலையையும் மட்டக்களப்பையும் மலையக மன்னனிடம் ஒப்படைத்தனர்.
2. 1640 இல் நீர்கொழும்பு, காலி ஆகிய கோட்டைகளைக்கைப் பற்றி தாங்களே ஆண்டனர். இதன் காரணம் இப்பகுதிகளில் கறுவா உற்பத்தி அதிகளவில் இருந்ததே ஆகும்.
3. 1640 இல் ஒல்லாந்தருக்கும் போர்த்துக்கேயருக்குமிடையே நட்புறவு ஏற்பட்டது.
4. ஆனால் 1652 இல் மீண்டும் இருவருக்கிடையேயும் போர்தோன்றியது.
5. இறுதியில் 1505 தொடக்கம் நிலவிய போர்த்துக்கேயரின் ஆட்சி 1656 இல் முடிவடைந்தது. போர்த்துக் கேயரின் ஆதிக்கத்திலிருந்த கோட்டைகள் ஒல்லாந்தர் வசமாயின.

1658 இம் ஆண்டு முதல் ஒல்லாந்தருக்கும் மலையக இராச்சியத்துக்குமான தொடர்பு மிகச் சிக்கலாயிருந்தது.

1659 ஆல் போர்த்துக்கேயர் ஆண்ட பல பிரதேசங்களை இரண்டாம் இராசசிங்கன் கைப்பற்றினான். இவனுக்குப் பின் இவன் மகன் இரண்டாம் விமலதர்ம சூரியன் (1687 ~ 1707) மலையகத்தை ஆண்டான்.

## இவனின் காலத்திலிருந்த ஆட்சி முறை

1. மிகவும் அமைதியான ஆட்சியாளராக இருந்தமை.
2. ஒல்லாந்தருடன் நட்புடன் செயற்பட்டமை.
3. சீனாவில் இருந்து பிக்குகளை வரவழைத்து 'உபசம்பதாவை' மீண்டும் ஏற்படுத்தியமை.
4. தலதா மாளிகையை மூன்று மாடிகள் கொண்டதாகச் செய்து மேலும் முன்னேற்ற மடையச் செய்தான்.

## ஸ்ரீ வீர பராக்கிரமபாகு நரேந்திரசிங்கன்

இரண்டாம் விமலதர்மசூரியனுக்குப் பிறகு அவனது மகன் ஸ்ரீ வீர பராக்கிரமபாகு நரேந்திரசிங்கன் 1707ல் அரசனானான். இவன் கோபக்காரன். திறமையற்ற அரசன் என வரலாறு கூறுகிறது. இவனது காலத்தில்.

1. மலையக பிரஜைகளுக்கும் ஒல்லாந்தருக்குமிடையே கிளர்ச்சி தோன்றியது.
2. மலையகத்தில் உற்பத்தியாகும் பொருட்களை ஒல்லாந்தருக்கு விற்கக்கூடாது என உத்தரவு பிறப்பித்தான்.
3. மலையக இராச்சியத்துக்கூடாக யானைகள் கொண்டு செல்வதை தடைசெய்தான்.

கி. பி. 1739 இல் நரேந்திரசிங்க மன்னன் இறந்தான்

## ஸ்ரீ விஜய இராசசிங்க மன்னன் (1739 – 1743)

நரேந்திர சிங்க மன்னனுக்கு வாரிசு இல்லாதபடியால் இவனின் மனைவியின் இளைய சகோதரனான விஜய இராசசிங்கன் நாயக்க குலத்து வழக்கப்படி அரசனானான்.

அந்நிய நாட்டினனான இவனின் ஆட்சியில் இந்த நாட்டின் இறுதித் தேசிய இராச்சியமான மலையக இராச்சியம் வீழ்ச்சியடைந்தது. இதன் காரணம்.

1. அரச சபைப் பிரதானிகள் அதிகாரம் அதிகரித்தமை.
2. நாயக்க வம்சப் பிரதானிகளுக்கும் சிங்களப் பிரதானிகளுக்கும் இடையே அரச சபையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டமை.
3. சிங்களப் பிரதானிகளுக்கும், அரசனுக்குமிடையே மனஸ்தாபங்கள் ஏற்பட்டமை.

4. மலையக இராச்சியத்தின் சுதந்திரத்துக்குப் பெரிதும் கைகொடுத்த மக்களது ஆதரவை மன்னன் இழந்தமை.

நாயக்க வம்ச ஆட்சியை எதிர்த்த ஒல்லாந்தருக்கும் மலையக மக்களுக்குமிடையே இருந்த உறவு குறைந்தது. ஒல்லாந்தரின் எதிர்ப்பைப் பெற்ற ஸ்ரீ விஜய இராசசிங்கன் 1747 இல் இறந்தான்.

## கீர்த்தி ஸ்ரீ இராசசிங்க மன்னன் (1742 – 1782)

1. கி. பி. 1747 இல் ஸ்ரீ விஜய இராசசிங்கன் இறந்ததும் அவனின் மனைவியின் தம்பி கீர்த்தி ஸ்ரீ இராச சிங்கன் அரசனானான்.
2. இவன் நாயக்க அரசர்களில் சிறந்தவனாயிருந்தான்.
3. இவன் ஒல்லாந்தருக்குப் பயந்து நகரைக் கைவிட்டு ஓடி ஒளிந்தான்.
4. ஒல்லாந்தர் மலையகத்துள் புகுந்து பல தீமைகள் புரிந்தனர்.
5. பின் ஒல்லாந்தருக்கு சாதகமான ஓர் ஒப்பந்தத்துக்கு மன்னன் உடன்பட்டான்.

## கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் இலங்கை வரலாற்றில் முக்கியமான மன்னன் என்பதற்கு ஆதாரமான காரணங்கள்.

* இலங்கையில் பின்னடைவு அடைந்திருந்த புத்தசமயத்தை மீண்டும் உபசம்பத மூலம் வளர்ச்சியடையச் செய்தான்.
* வருடாந்தம் தலதா பெரஹரா நடத்த வழி செய்தான்.
* விகாரைகளில் புத்த சிலைகள் அமைக்க உதவி செய்தான்.
* பௌத்த சாசனத்தின் வெற்றிக்கு மகத்தான சேவை வழங்கினான்.
* கல்வி, கலாச்சார வளர்ச்சிக்கு பெரிதும் சேவை யாற்றினான்.

## 3.2. செயல் நெறி

**1. பின்வரும் வினாக்களுக்கு கீறு இட்டஇடத்தை நிரப்புக.**

1. தலதா மாளிகை ................. இராச்சியத்தில் அமைந்துள்ளது.
2. நீரோடைகளும், நீர்வீழ்ச்சிகளும், மலைகளும் ......................... மேம்படுத்துகின்றன.
3. கரையோரப் பகுதியில் அதிகாரத்தைப் பலப்படுத்திய அந்நியர் ................. ஆகும்.
4. அரசன், பிரபுகள் அடங்கிய மலையக அரச சபை ..................... என்பதாகும்.
5. வரிஅறவிடும் அதிகாரிகள் ........................ ........................ வரிகளை அறவிட்டனர்.
6. வாழ்க்கையின் சகல கருமங்களும் ......................... நிறைவேற்றப்பட்டன.
7. கண்டியில் வருடா வருடம் நடைபெறுவது ............................ பெரஹராவாகும்.
8. பௌத்தர்கள் ............................ கௌரவம் அளித்துள்ளனர்.
9. ஓவியங்களில் முக்கிய தொனிப் பொருள் ஒன்றாக ......................... விளங்குகிறது.
10. பாய் பின்னல் பண்டைக்கால முதல் ...................... எனும் இடத்தில் பிரசித்தமானது.
11. இலங்கையின் இராசதானி ........................... பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
12. போர்த்துக்கேயர் மலையக அரசனுடன் ........................ நோக்கத்திற்காக தொடர்பு கொண்டானர்.
13. ஒல்லாந்தர்கள் ......................... ஆண்டு மலையகத்திற்கு வந்தனர்.
14. ஸ்ரீ விஜய இராசசிங்கன் ........................ நாட்டைச் சோர்ந்தவன் .
15. கல்வி, கலாச்சாரத்தை வளர்க்க .............................. என்ற அரசன் உதவி புரிந்தான்.

**11. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை தருக.**

1. கண்டி இராசதானி எவ்வளங்களைக் கொண்டிருந்தது?
   ..............................................................................................................
2. மேல் நாட்டினர் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிக்க முடியாமைக்குக் காரணங்கள் யாவை?
   ..............................................................................................................
3. குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகளைக் கூறுக.
   ..............................................................................................................
4. பிரபுக்கள் வசித்த வீடுகள் எப்படியானவை?
   ..............................................................................................................
5. பின்வரும் சொற்களுக்கு சுருக்கமாக விளக்கம் தருக.
   கபாடகம் / நிந்தகம் / விகாரைக் காணி / மானிய நிலம்
   ..............................................................................................................
6. கண்டி இராச்சிய விவாக முறை யாது?
   ..............................................................................................................

7. பௌத்த சமய பிக்குகளால் சமூகத்திற்கு ஆற்றப்பட்ட சேவைகள் யாவை?

...........................................................................................................................................

8. செனரத் மன்னனின் ஆட்சியில் காணப்பட்ட வளர்ச்சி யாது?

...........................................................................................................................................

9. ஒல்லாந்தர் எவ்வாறு மலையகத்துள் உட்பிரவேசித்தனர்?

...........................................................................................................................................

10. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் இலங்கை வரலாற்றில் முக்கியமான ஒரு மன்னனாக விளங்கியமைக்குக் காரணங்களைத் தருக.

...........................................................................................................................................

111. **பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடை தருக.**

1. கண்டி இராசதானியின் சிறப்பியல்புகள் பற்றி சஞ்சிகை ஒன்றிற்கு ஆக்கம் ஒன்றை களப் புத்தகத்தில் எழுதுக.
2. குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகளை அட்டவணைப்படுத்துக.

| | |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

3. கண்டி இராசதானியின் பொருளாதார அமைப்பையும் இக்கால பொருளாதார அமைப்பையும் ஒப்பிட்டு ஓர் கருத்துரை கூறுக.
4. கண்டி இராசதானியை ஆண்ட மன்னர்களையம், அதன் காலங்களையும் ஒழுங்கு முறையில் அட்டவணைப் படுத்துக.

| அரசர்கள் | காலம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |

5. ஒல்லாந்தர் மலையக அரசர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை அட்டவணைப் படுத்துக.

| ஒப்பந்தம் |
| --- |
| 1. |
| 2. |
| 3. |
| 4. |
| 5. |

6. கண்டி இராசதானியின் இயற்கை அமைப்பு மேலை நாட்டினர்களுக்கு மிகவும் சிரமம் அளித்தது. இது பற்றிய உமது கூற்றை விளக்குக.

........................................................................................................................................................................

7. இரண்டாம் விமலதர்ம சூரியனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையே இருந்த அமைதியான சூழ்நிலையைப் பற்றிக் கூறுக.

........................................................................................................................................................................

8. தலதா மாளிகையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அரசர்களைக் கூறுக.

........................................................................................................................................................................

# 4. இலங்கையின் பிரித்தானியர் ஆட்சி

## 2.1. பாடப் பொழிப்பு

### பிரித்தானியர் ஆட்சிக்கு வருதல்

* பிரித்தானியர் இலங்கையில் கரையோரப் பிரதேசங்களை 1796 இல் ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினர்.
* 1815 இல் பிரித்தானியர் இலங்கை முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர்.
* பிரித்தானியரின் ஆட்சிக்குக் கீழ் இருந்த காலம் 133 வருடங்களாகும்.
* 1948 பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்று சுதந்திரம் அடைந்தது.

### பிரித்தானியர் கீழைத்தேசங்களை அடைதல்

பிரித்தானியர் கி. பி. 1600ஆம் ஆண்டளவில் முதன் முதலாக இந்தியாவை அடைந்தனர். இங்கு பிரான்ஸியருடன் வர்த்தகத்தில் மோதல் ஏற்பட்டதால் வர்த்தகத்தை விருத்தி செய்ய கப்பல்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க திருகோணமலைத் துறைமுகத்தை அடைய நினைத்தனர்.

### ஆங்கிலேயர் இலங்கை மீது கவனம் செலுத்தக் காரணங்கள்

* பருவகாலத்தில் பாதுகாப்பாக கப்பல்களை நங்கூரமிட்டு வைத்திருக்கக் கூடிய வசதி கொண்ட இயற்கைத் துறைமுகமாக திருகோணமலை விளங்கியமை.
* கீழைத்தேய, மேலைத்தேய வியாபாரத்துக்கான போக்குவரத்துப் பாதையில் மையமாக இலங்கை அமைந்திருந்தமை.
* இந்தியாவின் மேற்குக் கரையோரங்களிலும், கிழக்குக் கரையோரங்களிலும் இடம்பெறும் கப்பல் போக்கு வரத்தினை நிர்வகிக்கக் கூடிய மத்திய நிலையமாக இலங்கை இருந்தமை.

| ஆங்கில கிழக்கிந்திய கம்பனியால் அறவிடப்பட்ட வரிகள் |
|---|
| தென்னை வரி |
| சமுதாய வரி |
| மீன் வரி |
| உப்பு வரி |
| கள் வரி |
| புகையிலை வரி |

இவ்வரிகள் திரட்டுபவர்கள் ‘அமில்தார்’ என்பவராவர். இவர்கள் **வரி வசூலிப்பதில்** மக்களுக்கு அநீதி இழைத்தனர். இதனால் மக்கள் **கிளர்ச்சி செய்தனர்.** கிளர்ச்சிக்குரிய காரணங்களை ஆராய ‘மியூறன்’ குழு நியமிக்கப்பட்டது.

## 'மியூறன்' குழுவின் சிபாரிசு

1. வரி ஏல விற்பனை முறை ஒழிக்கப்படவேண்டும்.
2. புதிதாக விதிக்கப்பட்ட வரிகள் நீக்கப்படவேண்டும்.
3. வரி சேகரிப்பதற்கு இந்நாட்டு அலுவலர்களை நியமிக்க வேண்டும்.
4. காணிச் சட்ட முறையை மீண்டும் செயற்படுத்தவேண்டும்.

## இரட்டை ஆட்சி

நிர்வாகம், பிரித்தானியா முடியினாலும், வரி வசூலித்தல் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியாலும் மேற்கொள்ளப்பட்டதானது "இரட்டைஆட்சி" எனப்படுகிறது. இது தோல்வி அடைந்தது.

### காரணமாவன:

* இரு பிரிவினரினதும் அலுவலர்களுக்குள்ளும் ஒற்றுமையும் நல்லுறவும் காணப்படாமை.
* அரசாங்க அலுவலர்கள் திறமையற்றவர்களாயிருந்தமை.

## ஆளுநர் பிரடரிக் நோர்த்

1798 இல் பிரடரிக் நோர்த் ஆளுநரானார் ~ 1803ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முயற்சி செய்தார். எனினும் தோல்வியையே தழுவிக் கொண்டார். இவரது ஆட்சியில் கரையோரப் பகுதியில் நிர்வாக சம்பந்தமாக பல மாற்றங்கள் கொண்டு வந்தார்.

## ஆளுநர் தோமஸ் மெயிற்லண்ட்

இவர் 1805 ~ 1812 வரை ஆளுநராகப் பதவி வகித்தார். கண்டி இராச்சியத்தோடு நல்லுறவை ஏற்படுத்தினார். அதிகாரிகள் சிங்களம், தமிழ் கற்க ஏற்பாடு செய்தார். 1810இல் யூரிமார் முறையை இலங்கைக்குக் கொண்டுவந்தார்.

## ஆளுநர் றொபட் பிறவுன்றிக்

1812 இல் றொபட் பிறவுன்றிக் ஆளுநரானார். இலங்கையில் வர்த்தகத்தை முன்னேற்றமடையச் செய்வதே பிரித்தானியர் நோக்கமாக விருந்தது. எனவே யுத்தத்தின் மூலமாவது மலையகத்தைக் கைப்பற்ற முயற்சித்தனர். 1815ஆம் ஆண்டு 2ஆம் திகதி றொபட் ~ கண்டிப் பிரத்தானிகள் செய்த ஒப்பந்தத்தின் பின் மலையக இராசதானி ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ஆங்கில ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற முயற்சி

1815 இல் மலையக இராச்சியம் பிரித்தானியர் வசமானது. மலையக மக்கள் இதனை எதிர்த்து குரோதம் வளர்த்தனர் இதனால். 1818 இல் முதலாவது கிளர்ச்சி ஆரம்பமானது.

* கிளர்ச்சித் தலைவராக கெப்பற்றிபொல ~ மடுகல்ல ஆகியோர் இருந்தனர்.
* இரண்டாவது கிளர்ச்சி 1848 ஆம் ஆண்டு நடைபெற்றது.

## ஆளுநர் டொரிங்டன் கொண்டுவந்த புதிய வரி

| | | |
|---|---|---|
| கடைத்தெரு வரி | தெரு வரி | தோணி வரி |
| வண்டி வரி | துறைமுக வரி | துப்பாக்கிவரி |

## சமூக அரசியல் மாற்றங்கள்

*1815 ஆம் ஆண்டு இலங்கையின் முழு ஆட்சியும் பிரித்தானியர் வசமாயிற்று.*

## கோல்புறூக்

*வில்லியம் கோல்புறூக் 1829 இல் இலங்கை வந்தார் அவரது ஆலோசனைகளாவன:*

1. இலங்கையின் நிர்வாகம்
2. வரவும் செலவும்
3. அரச ஸ்தாபனங்கள்

## கோல்புறூக் ஆணைக் குழுவின் சிபாரிசு

* இலங்கை ஒருங்கிணைந்த ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.
* சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் அமைக்கப்படல்.
* 16 நிர்வாக மாகாணங்கள் 5 மாகாணங்களாகக் குறைக்கப்படல்.
* இராசகாரிய முறை ஒழித்தல்.
* பொருளாதாரத் துறையில் அரசாங்கத்துக்கு இருந்த ஏகபோக உரிமைகளை ஒழித்து தனியார் முயற்சிக்கும் சுதந்திரமான வர்த்தகத்துக்கும் இடம் அளித்தல்.
* கிராம சபைகளுக்கு இருந்த நிதித்துறை அதிகாரங்களைக் குறைத்து நீதிமன்ற முறையை ஏற்படுத்தல்.

## 1833ம் ஆண்டு சட்டவாக்கக் கழகம்

உறுப்பினர்
15

- உத்தியோகச் சார்புள்ளோர்கள் 9
  - ஐரோப்பியர்கள் 4
  - பறங்கியர்கள் 1
- உத்தியோகச் சார்பற்றோர் 6
  - சிங்களவர் 1
  - தமிழர் 1

*எனினும் 1910 இல் இச் சட்ட வாக்கக் கழகத்தின் யாப்பு முறை திருத்தி அமைக்கப்பட்டது, 1912 ஆம் ஆண்டில் இருந்த அமுலாக்கப்பட்டது.*

**1912 ஆம் ஆண்டு சட்டவாக்கக் கழகம்**

- உத்தியோக சார்புள்ளோர் 11
  - ஆளுநரால் நியமிக்கப்பட்டோர்
    - கீழ்நாட்டுச் சிங்களவர் ~ 2
    - தமிழர் ~ 2
    - கண்டிச் சிங்களவர் ~ 1
    - முஸ்லிம் ~ 1
    - 06
- உத்தியோக சார்பற்றோர் 10
  - தேர்தல் மூலம்
    - ஐரோப்பா ~ 2
    - பறங்கியர் ~ 1
    - கல்விகற்ற இலங்கையர் ~ 1
    - 04

மேற்படியாப்பு மிக சிறப்பானது. எனினும் முஸ்லீம் ~ சிங்கள கலவரத்தினால் 1921ல் ஓர் யாப்பு முறை சீர்திருத்தம் பெற்றது.

**1921 ஆம் ஆண்டு சட்டவாக்கக் கழகம்**

- உத்தியோக சார்புடையோர் 14
- உத்தியோக சார்பற்றோர் 23
  - தேர்தல் மூலம்
    - பிரதேச அடிப்படை 11
      - மேல்மாகாணம் ~ 3
      - ஏனைய மாகாணம் 1 × 8 = 8
    - இன அடிப்படை 3
      - ஐரோப்பியர் ~ 2
      - பறங்கியர் ~ 1
    - சங்கஅடிப்படை 2
      - கீழ்நாட்டு பெருந் தோட்டங்களின் சங்கங்கள் ~ 1
      - வர்த்தக சபை ~ 1
  - நியமன மூலம்
    - கண்டிச் சிங்களவர் ~ 2
    - இந்தியர் ~ 1
    - முஸ்லிம் ~ 1
    - சிறப்பு ~ 3

1921 ஆம் ஆண்டு சீர்திருத்தம் திருப்தி கொள்ளாமல் இலங்கையர் மிகவும் விரிவான யாப்பு வேண்டி கிளர்ச்சி செய்தனர். இதனால் 1927 இல் **டொனமூர் பிரபுவின்** தலைமையின்கீழ் ஆணைக்குழு அனுப்பிவைக்கப்பட்டது.

1931 இல் டொனமூர் சீர்த்திருத்த அடிப்படையில் அரசக் கழகக்கும் அமைக்கப்பட்டது.

**1931ஆம் ஆண்டு அரசுக் கழகம்**

- அரச அதிகாரிகள் 50
- பிரதேச பிரதிநிதிகள் 50
- ஆளுநரால் சிறுபான்மையருக்காக நியமிக்கப்பட்டவர்கள் 8

1. அரசுச் செயலாளர்.
2. சட்டச் செயலாளர்.
3. முதல் செயலாளர்.

## டொனமூர் குழுவின் ஆலோசனைகள்

1. சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை (21 வயதுக்கு மேற்பட்டோர்.)
2. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை விரிவாக்கப்பட்டமை.
3. அரசுக் கழகம் நிறுவப்பட்டமை.
4. நிர்வாகக் குழு முறை ஆரம்பிக்கப்பட்டமை

டொனமூர் யாப்பு முறையிலும் பல குறைபாடுகள் இருந்தன. இதனால் 1944 இல் **சோல்பரி பிரபு** தலைமையில் ஆணைக்குழு புதிய யாப்பு முறையை ஏற்படுத்தியது.

## சோல்பரி யாப்பு

பிரதி நிதிகள் சபை - 95 + 6 = 101.
செனற் சபை - 30.

## தேர்தல்

இலங்கையின் **முதன் தேர்தல்** 1947 இல் நடைபெற்று **டி. எஸ் சேனநாயக்கா** பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றார். **டி. எஸ். சேனநாயக்காவுக்கும்** பிரித்தானியா விற்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றதன் விளைவாக 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கைக்குச் **சுதந்திரம்** கிடைத்தது.

## பொருளாதார மாற்றங்கள்

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை.

கோப்பிப் பயிர்ச் செய்கை செல்வாக்குச் செலுத்தியது.

கோப்பி வீழ்ச்சியடைய, தேயிலை முன்னிலை பெற்றது, தென்னிந்தியாவிலிருந்து தமிழர்கள் தொழிலாளர்களாக வரவழைக்கப்பட்டனர். இலங்கையின் பொருளாதாரத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டது.

## றப்பர்

1877ஆம் ஆண்டளவில் றப்பர் செய்கை இலங்கையில் அறிமுகமானது. 1890 இல் றப்பர் இலங்கையின் வர்த்தகப் பயிராக. மாறியது முதன் முதலாக களுத்துறை மாவட்டத்தில் பயிர் செய்யப்பட்டது. கோப்பிப் பயிர் வீழ்ச்சியுடன் 1871 இல் நாட்டின் 37 % தாழ் நிலப் பகுதியில் தென்னைப் பயிர்ச் செய்கை ஆரம்பமாகியது. 1890 இல் 41% மாக இது அதிகரித்தது.

கிராமிய விவசாயத்தை முன்னேற்றுவதற்காக **ஹென்றி வோர்ட், றொபின்சன் கிரகரி** போன்ற ஆளுநர்கள் சிறிய நீர்ப்பாசனக் குளங்களையும் கால்வாய்களையும் புனரமைத்தனர்.

## போக்கு வரத்து

போக்குவரத்துப் பாதை முதலாவதாக **எட்வேட் பார்ன்ஸ்** என்பவரால் முயற்சி எடுக்கப்பட்டு ஆரம்பமானது. பின், **ஸ்கின்னர். கப்டன் டோசன்** உதவினர் 1833 இல் இராசகாரிய முறையைப் பயன்படுத்தி போக்குவரத்துப் பாதைகள் அமைக்கப்பட்டன.

1850 இல் போக்குவரத்துப் பாதைகள் கற்கள் பரப்பி, 'தார்' இட்டு போடப்பட்டன மரப் பலகைப் பாலங்கள் இரும்புப் பாலங்களாக மாறின.

## புகையிரத பாதை

புகையிரதப் பாதையை அமைக்க ஆளுனர் ஹென்றி வோர்ட் முதலாவதாக முயற்சி எடுத்தார்.

## இலங்கையின் புகையிரதப் பாதையின் வளர்ச்சி

1858 ~ 1863 கொழும்பு ~ கண்டி புகையிரதப் பாதை

1871 ~ பேராதனை ~ நாவலப்பிட்டியா புகையிரதப் பாதை

1877 ~ கொழும்பு ~ பாணந்துறை புகையிரதப் பாதை

1885 ~ பாணந்துறை மாத்தறை புகையிரதப் பாதை

1899 ~ நாவலப்பிட்டி ~ பண்டாரவளை புகையிரதப் பாதை

1905 ~ பொல்காவெல ~ குருநாகல ~ அநுரதபுரம் ~ யாழ்ப்பாணப் புகையிரத பாதை

1907 ~ கொழும்பு ~ புத்தளம் புகையிரதப் பாதை

1912 ~ கொழும்பு ~ இரத்தினபுரி புகையிரதப் பாதை.

**4. 1 செயல் நெறி**

1. சுருக்கமான விடை தருக.

1. இலங்கைக்கு பிரித்தானியர் வந்ததன் காரணம் யாது?

.......................................................................................................................................

2. பிரித்தானியர் முதலாவதாக வந்த ஆண்டு யாது?

.......................................................................................................................................

3. அவர்கள் ஆரம்பித்த வர்த்தக நிலையங்களைத் தருக.

.......................................................................................................................................

4. பிரித்தானியர் திருகோணமலை துறைமுகத்தை ஏன் தெரிந்து எடுத்தார்கள்?

.......................................................................................................................................

5. இந்தியாவில் பிரித்தானியரது வியாபார நிலையங்கள் யாவை?

.......................................................................................................................................

6. ஆங்கில கிழக்கிந்திய கம்பனியால் அறவிடப்பட்ட வரிகள் யாவை?

.......................................................................................................................................

7. 'பிரடரிக் நோர்த்' பற்றி சுருக்கமாக எழுதுக.

.......................................................................................................................................

8. றொபட் பிறவுண்றிக் பதவிக்காலம் பற்றிக் குறிப்பிடுக.

.......................................................................................................................................

9. 1818 இல் ஏற்பட்ட கண்டியக் கிளர்ச்சி பற்றி சுருக்கமாகக் கூறுக.

.......................................................................................................................................

10. இலங்கைக்கு எத்தனையாம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது?

.......................................................................................................................................

2. கீறிட்ட இடங்களை நிரப்புக.

1. ................................ ஆம் ஆண்டு சந்தையில் கோப்பியின் விலை வீழ்ச்சியடைந்தது.

2. ................................ இரண்டாவது கிளர்ச்சி தோன்றியது.

3. 'யூரிமார்' வழக்குகளை விசாரிக்க ................................ இலங்கைக்கு வந்தனர்.

4. ............................ கண்டிய இராச்சியம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது.

5. 1815 ஆம் ஆண்டு கண்டிப் பிரதானிகளுக்கும் ................................. இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது.

6. இரண்டாவது சுதந்திரப் போர் ................................ இல் இடம் பெற்றது.

7. வில்லியம் கோல்புருக் ............................ ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தார்.

8. கோல்புறாக் ஆணைக் குழு ........................ இல் சிபாரிசு செய்தது.

9. 1833 ஆம் ஆண்டு சட்டவாக்கக் கழக உறுப்பினர் ............................ ஆகும்.

10. இலங்கை ............................ ஆம் ஆண்டு ............................ திகதி சுதந்திரம் அடைந்தது.

**3. பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை தருக.**

1. இலங்கையில் நடைமுறைகளுக்கு வந்த சட்ட வாக்கக் கழகங்களையும் ஆண்டுகளையும் உறுப்பினர் தொகைகளையும் அட்டவணை மூலம் விபரிக்குக.

| ஆண்டு | உறுப்பினர் தொகை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

2. 'பிரித்தானியா இலங்கைக்கு ஆற்றிய சேவைகள்' என்ற தலைப்பில் பத்திரிகை ஒன்றிற்கு ஓர் கட்டுரை களப்புத்தகத்தில் எழுதுக.

3. கடைசியாக வந்த சோல்பரி ஆணைக் குழு விதப்புரைகளுக்கும் முதலாவதாக வந்த யாப்பு முறைக்கும் இடையே நிலவிய வேற்றுமைகளை விரிவாக விளக்குக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

4. 'இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை பற்றி ஓர் மேடைப் பேச்சு" தயாரிக்குக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

5. புகையிரதப் பாதையின் வளர்ச்சிப் படி முறைகளை ஒழுங்காகத் தருக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

## தேசிய மத கலாச்சார மறுமலர்ச்சி

எமது நாட்டின் யாப்பு முறை சீர்திருத்தங்களைக்கோரி பல போராட்டங்ளை மேற்கொண்ட தலைவர்களின் படங்களைப் பாருங்கள்.

1908 ஆம் ஆண்டு சேர் ஜேம்ஸ் பீரிஸ் நாட்டுக்குத் தேவையான கோரிக்கையை முன் வைத்தார். 1910 ஆம் ஆண்டு சீர்திருத்தம் ஏற்பட்டது.

## எமது தேசியத் தலைவர்கள்

| | |
|---|---|
| எப். ஆர். சேனநாயக்கா | அமதோரிஸ் மெண்டிஸ் பியதாச சிறிசேன |
| டி. எஸ். சேனநாயக்கா | ஆர்தர் வி. டபிள்யூ. ஏ. சில்வா |
| சேர். ரி. பி. ஜெயதிலக்க | பி. எச். ஏபிரகாம் தி சில்வா |
| எட்மன் ஹேவ வித்தாரண | |

1919 ஆம் ஆண்டில் இலங்கை தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. தேசிய செயலூக்கத் தலைவர்கள்:

| | |
|---|---|
| சேர் பொன்னம்பலம் அருணாசலம் | ஜேம்ஸ் பீரிஸ் |
| சேர் பொன்னம்பலம் இராமநாதன் | எப். ஆர். சேனநாயக்கா |
| ஈ. டபிள்யூ. பெரேரா | டி எஸ் சேனநாயக்கா |
| ஏ. ஈ. குணசிங்க | எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்க |
| டி. பி. ஜெயதிலக | ஜே. ஆர். ஜெயவர்த்தனா |

1924 ஆம் ஆண்டில் மீண்டும் யாப்பு முறைச் சீர்த்திருத்தம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.
1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பு முறை நடைமுறைக்கு வந்தது.
1947 ஆம் ஆண்டு பாராளுமன்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
முதல் பிரதம மந்திரியாக டி. எஸ். சேனநாயக்க தேர்ந்தெடுக்கப் பட்டார்.
1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தது.

## சமய மறுமலர்ச்சி

ஆங்கிலேயர் காலத்தில், சமய வளர்ச்சியானது கல்வியினை மையமாகக் கொண்டிருந்தது.

### கிறிஸ்தவ மதத்தைப் பரப்பியது


- மிசனரி சங்கம்
- பப்ரிஸ்ற் சங்கம்
- வெஸ்லியன் மிசனரி
- அமெரிக்கர்கள் மிசனரி

### இதனால்

1860 இல் பௌத்த இந்து கல்வி நிலையங்கள் செயலிழந்தன. எனவே பௌத்த, இந்து, இஸ்லாமிய கலாச்சாரங்கள் புரனமைப்பிற்கு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன **இதுவே கலாச்சார மறுமலர்ச்சி** ஆகும்.

### பௌத்த மத மறுமலர்ச்சிக்காக கேர்ணல் ஸ்டீல் ஒல்கொர்ட் என்பவரால் ஆற்றப்பட்ட சேவைகள்

* பிரம்ப ஞான பௌத்த சங்கத்தை ஆரம்பித்து பௌத்த சமய பிள்ளைகளின் கல்வியைக் கட்டி எழுப்ப வழிசெய்தார்.
* பௌத்த சமய பின்னணியில் இலங்கை மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக் கொடுக்க கொழும்பு ஆனந்த கல்லூரி, கண்டி தர்மராஜக் கல்லூரி, காலி தர்மராஜக் கல்லூரி, சங்கமித்தா கல்லூரி போன்ற கல்லூரிகளை ஆரம்பித்தார்.
* சரசவி சதரெஸ என்ற பத்திரிகையும் 'பூட்ஸ்ரி' என்ற ஆங்கில சஞ்சிகையும் ஆரம்பிக்க முன்னோடியாக இருந்தார்.
* போயாதினத்தை விடுமுறை தினமாக்கினார்.




### அநகாரிக தர்மபால

பௌத்த மத மறுமலர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியவர் இவர். தேசியப் பற்றினை மீண்டும் கட்டியெழுப்பினார். ~ 1891 இல் மஹாபோதி சங்கத்தை ஆரம்பித்தார். பௌத்த கல்விக்கு உதவி செய்தார்.

### ஆறுமுக நாவலர்

இந்து சமய வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். 1848 இல் யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணார் பண்ணையில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். இவர் இந்து சமயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி இந்து பாடசாலைகள் தொடங்கவதக்கு வழி வகுத்தார்.





### எம். சீ. சித்தி லெப்பை (1832 – 1898 வரை

முஸ்லிம் சமய மொழிக்காக உழைத்தவர். முஸ்லிம்களின் கல்விக்காகப் பாடுப்பட்டார். 1882 இல் கொழும்பு ~ மருதானை சாகிராக் கல்லூரியைக் கட்டி எழுப்புவதில் முன்னோடியாக இருந்தார். கண்டியில் மத்ரசாவை (இஸ்லாமிய சமய பாடசாலை) புனர் நிர்மாணம் செய்தார். நேசன் ~ ஞானதீபம் என்ற இரு பத்திரிகைகளை முஸ்லிம்களின் முன்னேற்றம் கருதி வெளியிட்டார்.

### கலாசார மறுமலர்ச்சி

* சிங்கள பாளி மொழிகளில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவந்தன.
* 'லங்கா லோகய' 1860 இல் வெளியான முதலாவது சிங்களப் பத்திரிகையாகும்.

| ஆண்டு | பத்திரிகை |
|---|---|
| 1860 | லங்கா லோகய |
| 1862 | லக்மினி கிரண, லக்மினி பஹன, அருணோதய |
| 1880 | சரசவி சதரெஸ |
| 1888 | இந்து சாதனம் |
| 1902 | சிங்கள ஜாதிய |
| 1909 | தினமின |
| 1931 | வீரகேசரி ~ தினகரன் |

நாடகங்கள், காட்சிகள் அரங்கேற்றப்பட்டன.

## 4-3. செயல் நெறி

1. கலாச்சார மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டுழைத்த தலைவர்களை ஒழுங்கு முறையாக அட்டவணைப்படுத்துக.

| |
|---|
| |
| |
| |
| |
| |
| |

2. 1910 ஆம் ஆண்டில் நடைபெற்ற சீர்திருத்தத்தைப் பற்றி ஓர் விமர்சனம் வரைக.

3. டொனமூர் யாப்பு முறை பற்றி உமது நண்பனுக்கு ஓர் விளக்கவுரை எழுதுக.

4. சமுதாய மறுமலர்ச்சி பற்றி ஓர் கட்டுரை வரை.

5. தமிழ், சிங்கள, முஸ்லிம், ஒவ்வொரு தலைவர்கள் பற்றியும் தனித்தனி சிறு கட்டுரை வரைக.

## 5. அபிவிருத்தி

## 2.1. பாடப் பொழிப்பு

அபிவிருத்தி எனப்படுவது மக்களும், நாடுகளும் தங்கள் வாழ்க்கை நலன்களை மேம்படுத்திக் கொள்வதற்காக சமூக, பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் வளர்ச்சியடைதலாகும்.

* முதலாம் அபிவிருத்தித் தசாப்தம்: 1961 ~ 1970 ஐக்கிய நாடுகள் அமையும்
* ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்தியும் ஏற்படுதல் ~ யுனெஸ்கோ
* வறுமை, வருமான ஏற்றத்தாழ்வுகள், வேலையின்மை போன்ற துறைகளை உயர்ந்த மட்டத்திலிருந்து தாழ்ந்த மட்டம் வரை கொண்டுவரல் அபிவிருத்தியாகும். ~ ட்டலி சியர்ஸ் 1972
* சனத்தொகை, சமூகம், கலாச்சாரம், அறநெறி என்ற காரணிகள் உள்ளடங்கிய அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளே அபிவிருத்தியாகும். மூன்றாம் அபிவிருத்தி தசாப்தம்: 1981 ~ 1990 ~ ஐக்கிய நாடுகள் அமையம்

**அபிவிருத்தி அளவீட்டு முறைகள் இரண்டு வகைப்படும்**

**மரபு வழி அளவீடு**

* ஆள்வித தேசிய உற்பத்தி
* ஆள்வீத தேசிய உற்பத்தியின் விருத்தி வேகம்
* ஒரு நாட்டின் செல்மதி நிலுவையின் உடன்பாடான அல்லது எதிர்மாறான தன்மை

**நவீன அளவீடு**

* பௌதீக வாழ்க்கைத் தர சுட்டி
* மனித அபிவிருத்திச் சுட்டி
* மனித சுதந்திரச் சுட்டி
* போசாக்கு மட்டத்தோடு தொடர்புடைய அளவீடுகள்
  * அன்றாடக் கலரி நுகர்வு
  * குழந்தைகளினதும், பிள்ளைகளினதும் போசாக்கு மட்டம்
* சுகாதாரமும் சனத்தொகையும் சம்பந்தமான அளவீடுகள்
  பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்ப்பு
  சனத்தொகை விருத்தி வேகம்
  ~ சிசு மரண சதவீதம்
  ~ தாய்மார் மரண வீதம்
  ~ நகர்ப்புற / கிராமப் புறச் சனத்தொகை
  ~ ஒரு வைத்தியருக்கான நோயாளிகளின் எண்ணிக்கை
* கல்வியோடு தொடர்புடைய அளவீடுகள்
  ~ எழுத்து, வாசிப்பு சார்ந்த திறன்கள்

~ தேசிய வருமானத்தில் கல்விக்காக செலவழிக்கும் சதவீதம்
~ ஒரு ஆசிரியருக்கான மாணவர்கள் எண்ணிக்கை

* பொது வசதிகள் தொடர்பான அளவீடுகள்
~ தனி நபர் சக்தி நுகர்வு
~ சனத்தொகையில் 1000 பேர்களிடம் உள்ள வானொலிப்பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலைபேசிகளின் எண்ணிக்கைகள்
~ ஒரு சதுர கிலோ மீற்றருக்குள் காணப்படும் வீதிகளின் நீளம்.

## ஆள் வீத தேசிய உற்பத்தி

$$\text{ஆள்வீத தேசிய உற்பத்தி} = \frac{\text{தேசிய உற்பத்தி}}{\text{மைய ஆண்டுச் சனத் தொகை}}$$

## பௌதிக வாழ்க்கைத் தரம் தொடர்பான தத்துவம்

இது ஐக்கிய நாடுகள் அமையத்தினால் அறிமுகமானது. மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்ட எண்ணக் கருவாகும். அதாவது
~ பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம்
~ சிசு மரண வீதம்
~ எழுத்தறிவு வீதம்

## மனித அபிவிருத்திச் சுட்டி

இது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் 1990 இல் அறிமுகமானது.

(1) பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம்.
(2) எழுத்து, வாசிப்பு சார்ந்த திறன்
(3) கொள்வனவுச் சக்தி.

| அபிவிருத்தி அடைந்த நாடுகள் | அபிவிருத்தியடையும் நாடுகள் |
|---|---|
| கனடா | இலங்கை |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | இந்தியா |
| ஐக்கிய இராச்சியம் | சீனா |
| யப்பான் | நேபாளம் |
| சுவிட்ஸ்ர்லாந்து | எதியோப்பியா |
| அவுஸ்திரேலியா | ஆர்ஜன்டினா |
| நியூசிலாந்து | ஈரான் |
| ஜேர்மனி | பங்களாதேஷ் |
| ஒல்லாந்து | மெக்சிகோ |

## வருமானத்தை கொண்டு அளவிடப்படும் நாடுகளும் - வருமானமும்

| வகை | ஆள்வீத தேசிய உற்பத்தி | நாடுகள் |
|---|---|---|
| குறைந்த வருமானம் உடைய நாடுகள் | அமெரிக்க டொலரில் 580 அமெரிக்க டொலரிலும் குறைந்தது | மாலைதீவு, பங்களாதேஷ், லாவொஸ், பூட்டான், வியட்நாம், நைஜீரியா, மோங்கொலியா |
| மத்திய வருமானம் | 580~5999டொலருக்கு இடைப் பட்டது | பப்புவா, நியூகினி, இலங்கை, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், பிரேசில், மெக்சிக்கோ |
| உயர் வருமானம் உடைய நாடுகள் | 6000 டொலர்களுக்கு மேல் | கனடா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், யப்பான், சுவிஸ், ஜேர்மனி |

| அபிவிருத்தியடைந்த நாடுகளின் பண்புகள் | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பண்புகள் |
|---|---|
| * ஆள் வீத தேசிய உற்பத்தியானது உயர்ந்த பெறுமதியினைக் கொண்டது. உ+ம்: ஐக்கிய அமெரிக்கா 25900 டொலர்கள் ~ (1995) | * ஆள்வீத தேசிய உற்பத்தியானது தாழ்ந்த பெறுமதி யினைக் கொண்டது. உ+ம்: நேபாளம் 180 டொலர்கள் (1995) |
| * பௌதிக வாழ்க்கைச் சுட்டியானது உயர் மட் டத்தில் காணப்படும் (யப்பான்) | * பௌதிக வாழ்க்கைச் சுட்டியானது தாழ்ந்த மட் டத்தில் காணப்படல் (பங்களா தேசம்) 35~(1995) |
| * மனித அபிவிருத்திச் சுட்டியானது உயர்ந்த மட் டத்தில் காணப்படும் (யாப்பான்) 0.938 (1993) | * மனித அபிவிருத்திச் சுட்டியானது தாழ்ந்த மட்டத் தில் காணப்படுதல் ~ பங்களாதேசம் 356 ~ (1993) |
| * சனத்தொகை அதிகரிப்பு வேகம் குறைவாகும் யப்பான் 0.2% (1995) | * சனத்தொகை அதிகரிப்பு வேகம் அதிகமாகும். பங்களா தேசம் 3.56%, 1993 சவூதி அரேபியா 4.3% (1995) |
| * பிறப்பின்போது வாழ்க்கை எதிர்பார்ப்பு அதிகமாகும் யப்பான் 80~90 வயது (1995) | * பிறப்பின் போது வாழ்க்கை எதிர்பார்ப்பு குறைவாகும். ஆப்கானிஸ்தான் 44 வயது (1995) |
| * உயர்ந்த எழுத்து, வாசிப்புத் திறன் யப்பான் 100% (1995) | * தாழ்ந்த எழுத்து வாசிப்புத் திறன் நேபாளம் 27% (1995) |
| * சிசு மரண வீதம் குறைவாகும் 100 பிறப்புக்களுக்கு 5~9 | * சிசு மரண வீதம் அதிகமாகும் 1000 பிறப்புக்களுக்கு 16 |
| * தனிநபரது கலரி நுகர்வு அதிகமாகும் ஐக்கிய அமெரிக்கா 3671 கலரி | * தனிநபரது கலரி நுகர்வு குறைவாகும் ஆப்காணிஸ்தான் 1710 |
| * நகர்ப்புறச் சனத்தொகை அதிகமாகும் ஐக்கிய இராச்சியம் 89% | * நகர்ப்புறச் சனத்தொகை குறைவாகும் பூட்டான் 7% |
| * உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பானது உயர்ந்த மட்டத்தில் காணப்படும் | * உள்நாட்டு உற்பத்தியில் கைத் தொழிலின் பங்களிப்பு தாழ்ந்த மட்டத்தில் காணப்படும். |
| * மூலதன வளங்கள் ஏராளம் | * மூலதன வளங்கள் பற்றாக்குறையானது |
| * தொழில் நுட்ப அறிவு உயர் மட்டத்தில் காணப் படும் | * தொழில்நுட்ப அறிவு குறைந்த மட்டத்தில் காணப் படும் |
| * வைத்தியர் ஒருவருக்கான நோயாளரின் எண் ணிக்கை குறைவாகும் ஜேர்மணி 333 | * வைத்தியர் ஒருவருக்கான நோயாளரின் என்னிக்கை அதிகமாகும். நேபாளம் 16106 |

அபிவிருத்தியடைந்த நாடாக விளங்குவதற்கு அந்நாட்டின் பொருளாதாரம் மாத்திரமன்றி, சமூக நலன்கள் சார்ந்த நடவடிக்கைகளும் உயர் மட்டத்தில் காணப்பட வேண்டும்.


### அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள்

பெருமளவு முதல் விளைவுப் பொருட்களாக இருத்தல் ~ சனத்தொகை விரைவாக அதிகரித்தல், வேலைவாய்ப்பின்மை, பராமரிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படல், மூலதனப் பற்றாக்குறை ~ தொழில் நுட்ப அறிவு குறைவு ~ குறைந்த வருமான மட்டம், சுகாதாரம், கல்வி வசதிகள் குறைவு போன்ற பல பிரச்சினைகள் உண்டு.

**பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமானவை**

மூலதனம் → பணம் → இயந்திர சாதனம் → கட்டிடங்கள்

### மூலதனப் பற்றாக்குறை




### மூலதனக் குறைவு

மூலதனப் பற்றாக்குறைவு மக்களின் வருமானமின்மையால் சேமிப்புக் குறைவதால் ஏற்படுகிறது. மூலதனம் இல்லாவிடில் உற்பத்தி குறைய, மக்களின் வருமானம் குறைய, அபிவிருத்தி வீழ்ச்சியடையும்.

மூலதனப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய உள்நாட்டுச் சேமிப்புக்களையும், வெளிநாட்டுச் செலாவணியையும் கூட்ட முனையவேண்டும்.

### அரசியல் அமைதியின்மை

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அரசியல் சார்ந்த நிலையான தன்மை, அமைதியான சூழ்நிலை அத்தியாவசியமாகும்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்திற்கு பணம் ஒதுக்கப்படுவதால் அபிவிருத்தி தடைப்படுகிறது. எனினும் இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அபிவிருத்தி செயற்திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்திச் செயற்திட்டங்களால் போசாக்கு, கல்வி, சுகாதாரம், இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த் தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உணவு உற்பத்தி

உணவுற்பத்தியை உயர்த்தும் செயற்றிட்டங்களாவன:
* குடியேற்றத் திட்டங்கள்
* துரித மகாவலித் திட்டம்
* ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள்
* கடல்வள அபிவிருத்தி

குடியேற்றத் திட்டங்கள் 1831 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டம் அமுல் நடத்தப்பட்டதிலிருந்து ஆரம்பமானதாகும். அவற்றுள் சில:

மின்னேரியா, மினிப்பை, பதவியா, ராஜாங்கனை போன்றவையாகும்.

1949 ஆம் ஆண்டில் முதல் முதல் ஆரம்பமான திட்டம் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயாநதிப் பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமாகும்.

### குடியேற்றத் திட்டத்தின் நோக்கம்

நன்நீர் மீன் வளர்ப்பு ~ வேலைவாய்ப்பை வழங்குதல் ~ காணி வழங்குதல்.

### மகாவலித் திட்ட அபிவிருத்தித் திட்டங்களின் நோக்கம்

- விவசாய கைத்தொழில் அபிவிருத்தி
  - விவசாயக் குடும்பங்களை குடியமர்த்தல்
- நீர் மின்சார உற்பத்தி
  - கால்வாய் அபிவிருத்தி
- புதிய நகர் நிர்மாணம்

### ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தித் திட்ட முறை

தேசிய திட்ட முறைகளால் நேரடியாகப் பயன் அடையமுடியாத பிரதேசங்களை அபிவிருத்தி செய்து கொள்வதற்காகப் பின்பற்றப்பட்ட ஒரு மணி ஒழுங்காகும். 1979 இல் குருநாகல் மாவட்டத்தில் இவ்வேலைத் திட்டம் அமுலானது.

### மீன்வள அபிவிருத்தி

- 1996 ஆம் ஆண்டில் மீன் உற்பத்தி 2290000 மெட்ரிக் தொன்
- 2000 ஆம் ஆண்டளவில் 341800 மெட்ரிக் தொன் அளவு கூடடும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது

1 வருடத்தில் 21கிலோ மீனை ஒருவர் உண்ணவேண்டும் என வைத்திய ஆலோசனை கூறுகிறது. எனினும் மனிதன் 13.2 கி. கிராமே உண்ணுவதாக ஆராய்ச்சி கூறுகிறது.

## கைத்தொழில் அபிவிருத்தி

பின்வரும் புள்ளி விபரங்களை நோக்கி அறியமுடியும்.

| வருடம் | தேசிய உற்பத்தி | மொத்த ஏற்றுமதியில் கைத் தொழில்களின் பங்கு | கைத்தொழில் துறைசார்ந்த ஊழியர் |
|---|---|---|---|
| 1950 | 16.9% | 0.5% | 7.4% |
| 1971 | 18.2% | 1.2 % | 10.0% |
| 1996 | 21.0% | 73.2% | 14.0% |

## ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்கள் நிறுவப்பட்டதன் நோக்கங்கள்

### இலங்கை மத்திய வங்கி அறிக்கை

1. வேலை வாய்ப்பை வழங்கல்
2. வெளிநாட்டு முதலீட்டாளரிடமிருந்து மூலதனம் பெறல்
3. கைத்தொழிலுக்கான தொழில்நுட்ப அறிவையும் முகாமைத்துவ அநுபவங்களையும் பெறல்
4. வெளிநாட்டுச் சந்தையைப் பெற்றுக்கொள்ளல்
5. பிரதேச அபிவிருத்தி
6. சர்வதேச தொடர்புகளை மேம்படுத்தல்.

**மின் சக்தியை உற்பத்தி செய்தல்**

எமது நாட்டின் அபிவிருத்திக்கு மின்சக்தியே பெருமளவு பயன்படுகிறது.

| மின்சக்தி உற்பத்தி | அளவு | வருடாந்தம் 1996 – 97 |
|---|---|---|
| 1. நீர்மின் சக்தியின் உற்பத்தியின் கொள்வனவு | 18 மெ. வா. | 1565 மெ. வா. |
| 2 மின் கூடங்களின் எண்ணிக்கை | 03 | 20 (1997) |
| சக்தி உற்பத்தியின் | 53 கி. வா. மணித் | 4377 கி. வா. மணித் (1996) |
| மொத்தம் தனிநபர் நுகர்வு | 6 கி. வா. மணித் | 200கி. வா. மணித் (1996) |
| மின் நுகர்வோர் எண்ணிக்கை | 1500/10 | 1.6 மில்லியன் (1996) |

## கல்வி

கல்வியானது பொருளாதாரம், சமூக மேம்பாடு என்பனவற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் முதன்மையானது

சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா இலவசக் கல்வியின் முன்னோடியாவார்.

1945 இல் இலவசக் கல்வி ஆரம்பித்து கல்வியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் 1994 அம் ஆண்டில் 90% மாக எழுத, வாசிக்கும் திறன் அதிகரித்தது.

| கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் | கல்விசார் ஆய்வுகள் |
|---|---|
| 1. 1980 முதல் பாடநூல் இலவச விநியோகம்<br>2. 1993 பாடசாலை சீருடை இலவசம்<br>3. ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ~ கல்விக் கல்லூரி நிறுவுதல்<br>4. புதிய பல்கலைக்கழகம் ஆரம்பித்தல். | கலைத் திட்ட விருத்தி<br>ஆசிரியர் பயிற்சி |

### எண்ணெய் (சக்தி நுகர்வு)

வாகன அதிகரிப்பால் எண்ணெய் நுகர்வும் அதிகரித்துள்ளது.

இலங்கையில் விறகே பெரும்பாலோர் உபயோகிக்கும் 'சக்தி' யாகும். இதனால் மாசடைந்த நீர். மாசடைந்த வளி ஏற்பட்டு உயிரினங்களுக்கு ஆபத்தாகிறது.

### வீடு

வாழ்க்கைத் தரம் உயர **வீடு** செல்வாக்குச் செலுத்துகிறது.

| ஆண்டு | வீடுள்ளோர் தொகை |
|---|---|
| 1953 | 61% |
| 1994 | 80% |

1979 இல் தேசிய அபிவிருத்தி அதிகாரசபை நிறுவப்பட்டு வீடுகள் நிர்மாணிப்பு அதிகரித்தது.

வீடமைப்புத் திட்டங்கள்

- ஜன உதாவ
- கம்உதாவ

| வீடமைக்க உதவும் நிறுவனங்கள் |
|---|
| தேசிய வீடமைப்பு அதிகார சபை |
| அரச வர்த்தக வங்கி |
| தேசிய சேமிப்பு வங்கி |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி |
| கூட்டுறவு கிராமிய வங்கி |
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |

### சுகாதாரம்

நாட்டின் அபிவிருத்தியைப் பேணுவதில் சுகாதாரமும் ஒரு காரணியாகும். சுகாதார சேவைகள் முயற்சியால

- சிசு மரண விகிதாசாரம் குறைதல்
- மரண விகிதாசாரம் குறைதல்
- ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல்
- நோய்த் தடுப்பூசிகள் ~ சுகாதாரப்பழக்க வழக்கங்கள்
- நோய்த் தடுப்புச் சிகிச்சை என்பன அதிகரித்தன

உள்நாட்டு வைத்திய முறை, தென் இந்திய சித்த வைத்திய முறை, அரேபிய யூனானி வைத்தி, முறை என்பன சேர்ந்து

ஆயுள்வேத வைத்திய முறை ஆக்கப்பட்டுள்ளது

## போக்கு வரத்து

போக்கு வரத்துச் சேவை விரிவடைந்தால் நாட்டின் பொருளாதாரம் விரிவடையும். இலங்கையின் போக்குவரத்து பெருந்தெருக்கள் ~ புகையிரதப் பாதை ~ ஆகாய ~ கடல் வழிப் பாதைகள் மூலம் நடைபெறுகிறது.

கடந்த 50 ஆண்டுகாலத்துள் போக்குவரத்து சேவை விரிவடைந்த முறையை அட்டவணை மூலம் அறிந்து கொள்ளுங்கள்.

| | 1948 | 1996 | 1997 |
|---|---|---|---|
| பெருந் தெருக்களின் நீளம் கி. மீ. | 11000 | | 100000 |
| புகையிரதப் பாதையின் நீளம் கி. மீ. | 1438 | | 1463 |
| வாகனங்களின் எண்ணிக்கை | 47210 | | |

புகையிரதப் பாதை குறைவுபட்டதற்கு மூலதனப் பற்றாக்குறையே காரணமாகும்.

விமான சேவை 1932 ஆம் ஆண்டு ஆரம்பமாயிற்று. தற்போது 20 நாடுகளுடன் விமான சேவை நடைமுறைப்படுத்தப்படுகிறது. விமான சேவை, போக்குவரத்தில் பாரிய சேவை ஆற்றுகிறது. இதனால் ஏற்றுமதியும் உல்லாசப் பயணத் துறையும் அதிகரித்துள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு நிகழ்ச்சிகளை உடனுக்குடன் ரூபவாஹினி மூலம் அமைந்து கதைக்க கண்டுமகிழ தொடர்பாடல் உதவுகிறது.

## தொடர்பாடல்

அஞ்சல் சேவை | நாளிதழ்கள் | சஞ்சிகை | திரைப்படம் | தொலைபேசி | வானொலி

தொலைக்காட்சி | ரெலக்ஸ் | பக்ஸ் | செயற்கைக் கோள் | இன்றநெட் | ஈமெயில்

தாபால் சேவை, தந்திச்சேவை, தொலைபேசி, கம்பியில்லாத தொலைபேசி, செலுலர் போன்றவையும் அண்மையில் தேர்ச்சி பெற்றுள்ளன.

வானொலி சேவை 1925 ஆம் ஆண்டளவில் ஆரம்பமானது.
தொலைக்காட்சி 1979 ஆம் ஆண்டளவில் ஆரம்பமானது.
தனியார் தொலைக்காட்சி 1992 ஆம் ஆண்டளவில் ஆரம்பமானது.

அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவே மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இதில் உங்களின் பங்களிப்பு (மக்களின்) மிக மிக அத்தியாவசியமானது.

வளங்களைப் பாதுகாப்பது உங்கள் கடமை. விளங்களைச் சிக்கனமாகப் பாவிப்பது மேலானது. நாட்டின் எதிர்காலத் திட்டங்கள் தீட்டும்போது உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதல் சாலவும் சிறந்தது.

**5 - 2 செயல் நெறி**

1. சுருக்கமான விடை தருக.

1. அபிவிருத்தி என்றால் என்ன?

.......................................................................................................................................

2. அபிவிருத்தியை அளவிடும் அளவீட்டு முறைகள் எவை?

.......................................................................................................................................

3. மனித அபிவிருத்திச் சுட்டியின் பிரமாணங்கள் யாவை?

.......................................................................................................................................

4. போக்குவரத்து அபிவிருத்தி தொடங்கிய ஆண்டு எது?

.......................................................................................................................................

5. அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிடுக?

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

6. எமது நாட்டின் அரசியல் நிலை யாது? சுருக்கமாகக் கூறுக.

.......................................................................................................................................

7. குடியேற்றத் திட்டங்கள் இரண்டை எழுதுக.

.......................................................................................................................................

.......................................................................................................................................

8. ஒருவருக்கு வருடமொன்றிற்த் தேவையான மீனின் அளவு யாது?

.......................................................................................................................................

9. 1996 ஆம் வருடத்தில் கைத்தொழில் துறை சார் ஊழியர் தொகை யாது?

.......................................................................................................................................

10. மின்சார சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது?

.......................................................................................................................................

11. இலவசக் கல்வியின் தந்தை யார்?

.......................................................................................................................................

12. இலவச சீருடை வழங்கப்பட்ட ஆண்டு யாது?

.......................................................................................................................................

13. புதிய வீடமைப்புத் திட்டம் ஒன்றின் பெயர் தருக?

.......................................................................................................................................

14. சுகாதார சேவைகளை நடத்தும் அமைச்சு யாது?

.......................................................................................................................................

2. பின்வரும் அட்டவணைகளைப் பூர்த்தி செய்க.

1.

| அபிவிருத்தி அடைந்த நாடுகள் | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் |
|---|---|
| | |

2. நாடுகளின் வருமானங்களும் வகைகளும் அட்டவணை நிரப்புதல்

| வகை | ஆள்வீத தேசிய உற்பத்தி | நாடுகள் |
|---|---|---|
| | | |

3.

| அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பண்புகள் | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பண்புகள் |
|---|---|
| | |

3. விபரமாக விடை தருக.

1. எமது நாட்டின் அரசியல் அமைதியின்மை பற்றி லண்டனிலுள்ள உமது நண்பருக்கு ஓர் கடிதம் எழுதுக.
2. "உணவு உற்பத்தித் திட்டம்" பற்றி நீர் அறிந்ததைக் கூறுக.
3. ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்கள் நிறுவப்பட்டதன் நோக்கங்கள் யாவை?
4. இலங்கையின் கல்வி வரலாறு பற்றி தொலைக் காட்சி நிறுவனமொன்றிற்கு ஓர் சொற்பொழிவு ஆற்றுவதாகக் கருதி அதுபற்றி விபரமாக எழுதுக.
5. இலங்கையின் "போக்குவரத்து சேவைகள்" பற்றி விவாதம் ஒன்றை நடாத்துவதற்கு அறிக்கை தயாரிக்குக.
6. 'தொடர்பாடல்' என்றால் என்ன? இலங்கையிலுள்ள தொடர்பாடல்களைத் தருக. இவை எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆற்றிவரும் சேவைகளைக் கோவைப் படுத்துக.
7. 'எமது நாட்டின் அபிவிருத்தி' என்ற தலைப்பில் 1000 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று வரைக.

# 6. தேசப்படக் கல்வி

## பாடப் பொழிப்பு

தேசப் படத்தை படித்து அதிலுள்ள விடயங்களை எவ்வாறு விளங்கிக் கொள்வது எனும் அடிப்படை அறிவைப் பெறுவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

இப்பாடத்தைப் படிப்பது மூலம் பெறப்படும் அனுகூலம்:

* தேசப்படத்தின் அடிப்படை
* தேசப்படத்தை நிர்மாணிக்கும் முறை
* தேசப்படத்தில் காட்டப்படும் விடயங்களைப் பிழையின்றி அறிந்து கொள்ளும் திறன்.

## தேசப்படம்

தரைத் தோற்றத்தில் காணப்படும் பௌதிக அம்சங்களையும் மனித பண்பாட்டு அம்சங்களையும் குறித்து வைத்துக் கொள்ளும் நுட்பமுறையே **படவரைபு** ஆகும். அவ்வாறு செய்து கொள்ளுப்பட்ட குறிப்பே தேசப்படமாகும். புவியின் எப்பகுதியையாவது தட்டையான தாளில் அல்லது சமதளத்தில் கீறிக் காண்பிப்பது ஆகும்.

## மிகப் புராதன தேசப்படம்

கி. மு. 2800 ஆண்டளவில் மெசெப்பொத்தேமியாவில் (பபிலோனியா) வாழ்ந்த ஒருவர், தனது காணியைக் காட்டும் படத்தை களிமண் தட்டில் வரைந்துள்ளார். இதுவே எமக்குக் கிடைத்த மிகப் புராதனமான தேசப் படமாகும்.

## கிரேக்க அறிஞர்கள் ஆற்றியுள்ள தொண்டுகள்

தேசப்பட வரைபுக்கு கிரேக்க அறிஞர்கள் நடாத்திய வானியல் ஆய்வுகள் துணையாக இருந்தன. இவர்களே புவி கோள வடிவமானது எனும் எண்ணக் கருவை வெளியிட்டனர். இவர்கள் பூமியை 360 பாகைகளாகப் பிரித்தமை தேசப்படங்கள் வரைவதற்குப் பெரிதும் உதவின.

* தவறின்றி திசைகளைக் குறித்தல்
* அளவுத்திட்டத்திற்கு இணங்க வரைதல்
* அகல நெடுங்கோடுகளின் உதவியுடன் பிரதேசங்களை பிழையின்றிக் காட்டுதல்

என்பன கிரேக்கரின் தேசப் படங்களில் நன்கு அமைந்துள்ளன.

கி. பி. 150 ஆண்டு அளவில் கிரேக்க நாட்டைச் சேர்ந்த தொலமியினால் வரையப்பட்ட முதலாவது உலகப்படத்தில் இந்து சமுத்திரம் நிலப்பரப்பினால் சூழப்பட்ட மாபெரும் உண்ணாட்டு கடலாகக் காட்சி அளிக்கின்ற இலங்கையை தப்ரோபேன் எனக் குறித்துள்ளார். அப் படத்தில் உலக மக்கள் அறிந்திருந்த 48 இடங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

## தேசப் படத்தின் அவசியம்

மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாக தேசப்படமும் விளங்குகின்றது. மனித வாழ்க்கையில் பல்வேறுபட்ட முக்கியமான வேலைகளின் போது தேசப்படம் பயன்படுகின்றது.

## தேசப்படம் உதவிசெய்யும் சில நடவடிக்கைகள்

* விமான மார்க்க, கடல் மார்க்க பயணம்
* அரசியல் நடவடிக்கை
* நிர்வாக, யுத்த நடவடிக்கை
* ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கை

தேசப்படம் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுவதால் நவீன யுகத்தில் கணனி, செய்மதி ஆகிய நவீன உபகரணங்கள் மூலம் வரையப்படுகின்றது.

## தேசப் படத்தின் அடிப்படை

தேசப்படம் உருவாக்கப்படும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள்:

* படம் அமைக்கும் இடம்
* பிரதேசம்
* நாடு
* பிழையற்ற அளவுத்திட்டம்
* திசை
* அமைவு சரியாக இருத்தல் வேண்டும்

## 1:50,000 பௌதிக உறுப்பு தேசப்படங்கள்

பல்வேறுபட்ட தேசப்படங்களுள் 1987ஆம் ஆண்டு இலங்கை நிலவளவைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 1: 50, 000 அளவுத்திட்ட தேசப்படம் சிறப்பு வாய்ந்ததொன்றாகும். இத் தேசப்படத்தை கற்பதன் மூலம் பல புவிச்சரிதவியல் அம்சங்களை இனங்காண முடியும்.

இத் தேச வரை படம் 2cm தூரம் நிலத்தில் 1Km தூரமாக அமைகிறது. இதனாலேயே இடவிளக்கவியல் படம் 1: 50, 000 தேசப் படம் என்று பெயர் பெற்றுள்ளது.

1 : 50, 000

1cm = 50, 000 cm

அதாவது 1 cm = 0.5 k. m

எனவே 2cm = 1 km ஆகிறது.

இலங்கை முழுவதற்கும் 1: 50, 000 என்ற அளவுத் திட்டத்தில் ஒரே படமாக வரைவில் அப்படமானது 894 cm நீளமுடையதாகவும், 438cm அகலம் உடையதாகவும் அமையும்.

ஏனெனில்

இலங்கையின் மிகக் கூடிய நீளம் 447 km × 2 = 894 cm

இலங்கையில் மிகக் கூடிய அகலம் 219 km × 2 = 438 cm

இந்தப் பரப்பளவில் தேசப்படம் ஒன்று ஒருங்கே வரைவது எளிதன்று. இதனால் இலங்கையை 92 கூறுகளாகப் பிரித்து 1:50,000 படம் வரையப்பட்டு உள்ளது. இவ்வாறு வரையப்பட்ட படம் 40 km நீளத்தையும், 25 km அகலத்தையும் கொண்ட நிலப் பரப்பையும், நீர்ப் பரப்பையும் உள்ளடக்கியுள்ளது.

## தேசப் படத்தில் குறித்தல்

கல்வி நடவடிக்கைகளின் போது தேசப் படத்தில் குறித்தல் மிக முக்கியமானதாக விளங்குகிறது.

- புவியியல்
- சமூகக்கல்வி வரலாறு
- பொருளியல்
- அரசியல் ஆகிய பாடங்களில்
- நாடுகளின் செயல் திட்டம் குறித்தல்
- அரசியல் எல்லைகளைக் குறித்தல்
- பெருந் தெருக்கள், புகையிரதப் பாதைகள், விமான பாதைகள், கப்பல் பாதைகள் என்பவற்றைக் குறிக்கப் பயன்படுகிறது.

## தேசப் படத்தை பிரதி செய்யத் தேவையானவை எழுதுக

1. ..............................................................................................................
2. ..............................................................................................................
3. ..............................................................................................................
4. ..............................................................................................................
5. ..............................................................................................................
6. ..............................................................................................................
7. ..............................................................................................................

## தேசப்படத்தை பிரதிசெய்யும் முறை

- தேவைப்பட்ட தேசப்படத்தை வரைவதற்கு படத்தின் மேல் ரிசு தாளை வைத்து நான்கு பக்கங்களையும் கெட்டியாகப் பிடிக்கும் வகையில் குண்டு ஊசியால் இணைக்குக.
- ஒரு மேசையின் மேல் வைத்து தேவைப்பட்ட ரேகைகளின் மீது பென்சிலால் வரைக.
- இணைக்கப்பட்ட குண்டூசிகளை அகற்றி ரிசுத்தாளை வேறாக எடுக்கவும்.
- வரைதலின் பொருட்டு கொண்ட வந்த தாளின் மேல் ரிசுத் தாளை வைக்குக. அவ்விரண்டு தாள்களையும் நெகிழாது தாள் கிளிப்புகளால் இணைக்குக.
- ஓரளவு இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ள ரிசுத் தாளின் மேல் பென்சிலால் வரைக. பின் பேப்பர் கிளிப்புகளால் அகற்றுங்கள்.
- கடதாசியின் மேல் பேப்பர் கிளிப்புகளை அகற்றுங்கள்
- கடதாசியின் மேல் பதியப்பட்டுள்ள ரேகைகளை கறுப்பு நிற மைகொண்ட குமிழ் முனைப் பேனாவால் வரைக.

நீங்கள் தயாரித்த படத்தில் குறிக்க வேண்டுமாயின் அவ்விடங்களில் ஒரு புள்ளி இடுக.

நிறம் தீட்டக் கூடிய படமொன்றாயின் வர்ணப்பென்சில்களால் மிகவும் கவனமாக நிறந்தீட்டுக. நிறந் திட்டுவதற்கு நிறப் பென்சில்கள் மிகவும் பொருத்தமானதாகும். நன்கு கூராக்கப்பட்ட பென்சிலால் நிறந்தீட்டுதல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட நிறங்களாலே நிறம் தீட்டும் போது குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளைத் தாண்டாதிருத்தல் வேண்டும். ஒரேயமைப்பில் நிறம் பரந்து காணக் கூடியவாறு நிறந்தீட்டுக. படத்தின் எல்லைக் கோடுகளை முதலில் பென்சிலால் குறித்துக் கொள்க. பின்பு அதன் மேல் கறுப்பு நிற மையால் கோடிடுவதன் மூலம் பூரணமாக்குக.

### தேசப் படங்களைக் கையாளுதல்

கல்வி நடவடிக்கைகளின் போதும் அன்றாட வாழ்க்கையின்போதும் தேசப் படங்களைக் கையாள் வதன் ஊடாகத் தேவையான செயல்களை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ள முடிகின்றது.

எனவே, தேசப் படமொன்றைத் திருத்தமாக வரைந்து காட்டவேண்டும்.

தேசப் படத்தைச் சரியாக விளங்கிக் கொள்ளும் திறன் "தேசப்படங்களை வாசித்தல்" எனப்படுகிறது.

### தேசப்படங்களை வாசித்தல்

தேசப் படப் புத்தகமொன்றை வாசிப்பதற்கு அதிலுள்ள குறியீடுகள், வர்ணங்கள், அகலாங்கு, நெட்டாங்குகளின் அமைவு பற்றி அறிந்திருக்க வேண்டும். தேசப்படமொன்றில் காட்டப்படுகின்ற இடத்தையும், பிரதேசத்தையும் அது பற்றிய தகவல்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கையின் சனத்தொகைப் பரவலின் வித்தியாசத்தைக் கோடுப் பட வித்தியாசங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது. இப்படம் மூலம் சனப் பரம்பல் பற்றியும் நாம் அறிய முடிகின்றது.

## 6. 2. செயல் நெறி

1. கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை தருக.

   1. தேசப் படம் என்பது யாது?

      ......................................................................................................................

   2. தொலமியினால் வரையப்பட்ட உலகப் படத்தில் இலங்கையை எப் பெயரில் குறிப்பிட்டு உள்ளார்?

      ......................................................................................................................

   3. தேசப் படம் உதவி செய்யும் செயற்பாடுகள் எவை?

      ......................................................................................................................

   4. தற்போது தேசப் படம் வரைய உபயோகிக்கும் நவீன உபகரணங்கள் எவை?

      ......................................................................................................................

   5. தேசப் படத்தில் முக்கியமாக அமைய வேண்டிய அம்சங்கள் எவை?

      ......................................................................................................................

6. இலங்கைத் தேசப்பட அளவுத்திட்டம் 1: 50, 000 ஆக இருக்க காரணம் யாது?

.........................................................................................................

7. தேசப் படத்தை எவ்வகையான பாடங்களுக்குப் பாவிக்கப்படுகின்றது?

.........................................................................................................

8. தேசப் படம் ஒன்றைப் பிரதி செய்யத் தேவையானவை எவை?

.........................................................................................................


9. தேசப் படங்களை வாசித்தல் என்பது யாது?

.........................................................................................................

10. நெட்டாங்கு, அகலாங்கு என்பவற்றின் பயன்பாடு யாது?

.........................................................................................................

2. கீழ்க் காணும் உலகப் படத்தைப் பயன் படுத்தி 1 முதல் 5 வரையான வினாக்களுக்கு விடை தருக.




1. மிசிசிப்பி ஆற்றுத் தொகுதி காணப்படும் இடத்தைக் காட்டும் எழுத்து யாது?
(1) A (2) B (3) C (4) D

2. "T" எழுத்தினால் காட்டப்படும் மலைத்தொடர் யாது?
(1) கொக்கேசஸ் (2) யூரல் (3) அல்ப்ஸ் (4) பிரனீஸ்

3. "H" எழுத்தினால் காட்டப்படும் நிறம் தீட்டப்பட்ட நிலப் பிரதேசம் எப்பொருளாதார நடவடிக்கைக்கு பிரசித்தி பெற்றது.
(1) மரக் கைத்தொழில் (2) சூதுமை உற்பத்தி
(3) கால்நடை வளர்ப்பு (4) சுரங்கத் தொழில்

4. இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பிரசித்தி பெற்ற பேர்ள் துறைமுகத்தை எந்த எழுத்து காட்டுகின்றது.
(1) J (2) K (3) L (4) M

5. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜேர்மனியரால் முதன்முதலாகத் தாக்கப்பட்ட நகரம் 'S' எழுத்தினால் காட்டப்படுகின்றது. அந்நகரம் யாது?
(1) பேர்லின் (2) பாரிஸ் (3) வார்சோ (4) டான்சிக்


2. இலங்கைப் படத்தை பார்த்து முதல் மூன்று வினாக்களுக்கு விடை தருக.


(i) தரப்பட்டுள்ள படத்தில் தேயிலை, தென்னை, இறப்பர் ஆகிய ஒவ்வொரு பயிருக்கும் முக்கியமான மாவட்டங்கள் தரப்பட்டுள்ளன. அம்மாவட்டங்களின் பெயர்களைத் தேயிலை, தென்னை, இறப்பர் என்ற ஒழுங்கு முறையில் எழுதுக.

(ii) தற்காலத்தில் இறப்பர்ப்பயிர்ச் செய்கை எதிர் நோக்குகின்ற நான்கு பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(iii) "தேயிலை" எனக் குறித்துக் காட்டப்பட்ட மாவட்டம் தேயிலைக்குப் பொருத்தமானது, தென்னைப் பயிருக்குப் பொருத்தமற்றது. அதற்கான இரண்டு காரணிகளைத் தந்து விவரிக்க.

(iv) இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருள்களுள் தேயிலை இன்றும் அதிக வெளிநாட்டுச் செலாவணியைத் தருவதாக விளங்குகிறது. அப்பயிர்ச் செய்கையை மேலும் விருத்தி செய்வதற்கு எடுக்கக் கூடிய இரண்டு நடவடிக்கைகளை விளக்குக.





## BRIGHT - இன்
## வெளியீடுகள்

- தமிழ் மொழியும் இலக்கியமும்
- சைவ நெறி
- சுகாதாரமும் உடற் கல்வியும்
- விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்
- தமிழ் மொழி இலக்கியம் - பாட்டுக்கு பொருள்
- தமிழ் மொழி இலக்கியம் - சந்தர்ப்பம் கூறல்
- **THE WORLD THROUGH ENGLISH WORK BOOK**
- இஸ்லாம்
- கட்டுரை மஞ்சரி
- சமுகக்கல்வியும் வரலாறும்

ISBN - 955 -8332 - 04 - 6

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL
SUPER MARKET COMPLEX , P.O. BOX NO.: 162,
COLOMBO - 11. TELE: 434770